
மாலை: 52 மார்ச் 2010 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு



அருள்மிகு கபாலீசுவரர்


குறைந்த செலவில் நீண்ட ஆயுள் உத்திரவாதத்துடன்
கோயில் கலசங்கள், விமானம், கவசங்கள், கொடிமரம்,பிரபை,
பத்தரை மாத்து தங்கத்தில் பளப்பளக்க செய்வோம்
Mylapore
Kapaleeshwarar kovil
Gopuram
June 2004
Thejus
24-Ct Gold Platings
94,g n chetty road,t.nagar, chennai 600 017. ph.2815 6370. 94440 00060 email: divyasid@gmail.com www.thejus.com




திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு: 2041 பங்குனி மாதம்
மாலை 52. மணி 3 மார்ச் 2010


## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

"பல்லாடு தலைசடைமேல் உடையான் தன்னைப்
பாய்புலித்தோ லுடையானைப் பகவன் தன்னைச்
சொல்லோடு பொருளனைத்தும் ஆனான் தன்னைச்
சுடருருவில் என்பறாக் கோலத்தானை
அல்லாத காலனை முன்னடர்த்தான் தன்னை
ஆலின்கீழ் இருந்தானை அமுதா னானைக்
கல்லாடை புனைந்தருளும் காபாலியைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே"

என திருநாவுக்கரசு சுவாமிகள் போற்றிப் பாடிய அருள்மிகு கபாலீசுவரப் பெருமானின் அருட்கடாட்சத்தினை முன் முகப்பிலும், அருள்தரும் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின் இராஜ அலங்காரத் தோற்றத்தினை உள் முகப்பிலும் கொண்டு இவ்விதழ் மலர்ந்துள்ளது.

திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்திலும், அதன்பின்னர் தோன்றிய பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்திலும், பங்குனி உத்திர நாளன்று அன்னை மீனாட்சிக்கு திருமணம் நடந்ததையும், சங்க காலத்திலும், அதன் பின்னர் தோன்றிய காப்பிய காலத்திலும், பங்குனி உத்திர நாளன்று விழா கொண்டாடிய சிறப்பை புறநானூற்றுப் பாடலின் மூலமும், இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தின் மூலமும், பங்குனி உத்திரத்தின் சிறப்பினைப் "பங்குனி உத்திரப் பிரமன்" எனும் தலைப்பில் தொகுத்து வழங்கியுள்ளார் தமிழாகரர் தெ.முருகசாமி அவர்கள்.

"ஸ்ரீராம மிச்ரர்" மணக்கால்நம்பி எனும் திருநாமம் பெற்றதையும் அவரின் பெருமைகளையும் "பாச்சுடர் வளவ துறையன்" அவர்கள் வழங்கியுள்ளார்.

பிரம்மனுக்கும், விஷ்ணுவுக்கும் சிவஞானம் அருளிய லிங்கோற்பவர் காட்சி தந்த தன்மையையும், அவர் காட்சி தரும் சில திருக்கோயில்களையும் "தழல் தூண் அதன் நடுவே ஒரு உருவம்" எனத் தலைப்பிட்டு வழங்கியுள்ளார் பேராசிரியர், சிவப்ரியா அவர்கள்.

பன்னிரு ஆழ்வார்களுள் நான்கமவராகத் திகழும் திருமழிசை ஆழ்வார் தேனெனத் தித்திக்கும் சுவைத் தமிழில் பாடியுள்ள, நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் திருச்சந்த விருத்தத்திலிருந்தும், நான்முகன் அந்தாதியிலிருந்தும் சில பாசுரங்களை எடுத்து, ஆழ்வாரின் பாசுரத்திறனைப் போற்றி பரவியுள்ளார் வேலூர்.ம.நாராயணன் அவர்கள்.

எது சொந்தம் என்பதற்கு கருத்துக்கள் நிறைந்த கதையுடன், அருண்மொழியரசு கிருபானந்த வாரியார் சுவாமிகள் வழங்கியுள்ள அறவுரை, அவரது நினைவலைகளாக "சொந்தம்" எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது.

திருச்சேறை அருள்தரும் சாரநாதப்பெருமாள் திருக்கோயில் சிறப்புகளும், திருவொற்றியூர் திருத்தலச் சிறப்புகளும், ஆலய உலாக்களாக இவ்விதழில் வெளிவந்துள்ளன.

முனைவர் திரு.டிஎஸ் இராமஸ்வாமி அவர்களின் "கண்டேன் கமலமலர்ப்பாதம்" எனும் தொடரும், செயல் அலுவலர் திரு.இராமநாதப்பிள்ளையின், "உலகம் உய்ய உதித்த உடையவர்" தொடரும் தொடர்ந்து இவ்விதழில் வெளிவந்துள்ளன.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் பங்குனியில் அரன் அருள் பெற்ற நாயன்மார்களின் சிறு குறிப்பு அழகிய வண்ணப்படங்களுடன் வழங்கப்பட்டுள்ளது.


திருமகளின், அவதார நன்னாளாகவும், திருமண நன்னாளாகவும் அமைந்துள்ள பங்குனி உத்திர நன்னாளில் அனைவரும் பெருமாளையும், பிராட்டியையும் சரணடைந்தும், சிவாலயங்கள் தோறும் முருகப் பெருமானுக்கும், நமையாளும் பரம்பொருளாம் ஈசனுக்கும், அம்பிகைக்கும் எடுக்கும் விழாக்களிலும் பங்கேற்று வாழ்வில் வளம் பெறுவோம் என வேண்டுகிறேன்.

வாசகப் பெருமக்கள் இதழினைப் படித்து இன்புறுவதோடு தொடர்ந்து தங்களது நல் ஆதரவினை வழங்கிட வேண்டுகிறேன்.

ப.ரா.சம்பத்


இந்துசமய அறநிலையத்துறை
119. உத்தமர் காந்தி சாலை,
சென்னை – 600 034.

(ப.ரா. சம்பத், இ.ஆ.ப.,)
ஆணையர்



# குறளோவியம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே "பிறப்பொக்கும்" என்று வள்ளுவர் அழுத்தம் திருத்தமாகக் கூற வேண்டியிருந்திருக்கிறது. இன்று இந்த இருபதாம் நூற்றாண்டில், சமுதாயம் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான சாதிப்பிரிவுகளால் சிதறுண்டு கிடப்பது போலவே அன்றும் வள்ளுவர் காலத்திலும் பிறப்பால் உயர்வு தாழ்வு மனப்பான்மை பாராட்டப்பட்டிருக்கிறது. அந்த வேதனையைத் தாங்க முடியாமல்தான் வள்ளுவர் பிறப்பொக்கும் எல்லா உயிர்களுக்கும் என்று குறள் தீட்டியுள்ளார்.

எல்லா உயிர்களுக்கும் என்று வள்ளுவர் குறித்தவுடன்; விலங்கினங்களும், பறவையினங்களும், ஊர்ந்து சென்றிடும் புழு பூச்சி இனங்களும்– அவரைப் பார்த்துக் கேள்விகளை அடுக்கின.

"எங்களுக்குள் சாதிப் பூசல்களே என்றைக்கும் இருந்ததில்லை. சாதி உணர்வுகள் தலை தூக்கி அதன் காரணமாக நாங்கள் அமளிகளை உருவாக்கியதே இல்லை! அங்ஙனமிருக்க 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று எம்மையும் சேர்த்து இழிவுபடுத்துதல் முறைதானோ?"

இவ்வாறு மிருகங்கள் கேட்டன! பறவைகள் கேட்டன! ஊர்வன கேட்டன!

"உயிர்கள் என்று பொதுவாகச் சொன்னதால் எல்லா உயிர்களையும் குறிப்பிடுமெனினும் – உங்களுக்கு ஆறாவது பகுத்தறிவு இல்லாத காரணத்தால் உங்களிடையே சாதிப்பூசல்கள் எழுவது இல்லை! பகுத்தறிவுள்ளவர்களாகக் கூறிக்கொள்ளும் மனிதர்களிடையேதான் பல்லாயிரம் சாதிகள்! சண்டைகள்! உயர்வு தாழ்வு உணர்வுகள்! குறளைப் படிக்கக்கூடியவர்களுக்காகத் தான் இதனை எழுதினேன். நீங்கள் படிக்க இயலாதவர்கள். உங்களுக்காக, இதனை நான் எதற்காக எழுதப்போகிறேன்! எனவே நான் 'உயிர்கள்' என்று குறிப்பிட்டிருப்பது இந்தக் குறளைப் பொறுத்தவரையில் மனிதர்களை எண்ணித்தான்!"

வள்ளுவர் விளக்கமளித்துவிட்டு வேறு வழியாகப் பயணம் தொடர்ந்தார். அங்கே இருவர், விவாதித்துக் கொண்டிருந்தனர்.


ஒருவர்: பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லையென்று குறள் கூறினாலும் கூட அவரவர் செய்கின்ற தொழில்களின் வேற்றுமையால் சிறப்பு இயல்புகள் மாறுகின்றன என்று சுட்டிக்காட்டியிருக்கிறது. அதனால் இசைவாணனாகிய நான் ஆசிரியத்தொழில் புரியும் உம்மைவிடச் சிறப்புடையவன்.

மற்றவர்: இல்லை! மறுக்கிறேன்! ஆசிரியர் தொழிலே சிறந்தது! அதற்கு ஒப்பிடக்கூடியதுகூட அல்ல உமது இசைத்தொழில்!

இருவரின் உரையாடல்

சூடேறுவதற்கு முன்பு வள்ளுவர் குறுக்கிடுகிறார்.

“சொற்போரை நிறுத்திடுக! நான் தொழிலுக்குத்தொழில் உயர்வு தாழ்வு இருப்பதாகவோ– சிறப்பு இயல்புகள் மாறுவதாகவோ–கூறிடவில்லை! ஒவ்வொரு தொழிலுமே அதனைச் செய்வோரைப் பொறுத்து வேறுபடுகின்றன. இதோ உங்களையே எடுத்துக் கொள்வோம்! ஒரு இசைவாணர், பாடினாலே ஊரார் காது கொடுத்துக் கேட்க மறுத்து வேறு அலுவல்களைக் கவனிப்பர்! மற்றொரு இசைவாணரின் இனிய இசையை விடிய விடியக் கேட்டு மகிழ்வர்! அது போலத்தான் ஒரு ஆசிரியர் மாணவரிடையே கேலிப் பொருளாக விளங்குவார்! இன்னொரு ஆசிரியரோ மாணவரால் மதிக்கத்தக்க மாண்புடையவராகத் திகழ்வார்! ஆகையால் தொழிலுக்குத் தொழில் வேறுபாடுகாண நான் விழைந்திடவில்லை. செய்யுந் தொழில் எதுவாயினும் அதிலே எய்துகிற சிறப்புகள் வேறுபடுகின்றன; செய்பவரின் அறிவாற்றலைப் பொறுத்து! இப்படித்தான் என் கருத்துக்கு விளக்கம் பெற வேண்டுமேயல்லாமல் நீங்கள் மோதிக்கொள்வது முறையல்ல”.



குறள் தந்த கோமானின் விளக்கவுரை கேட்டு, இசைவாணரும், ஆசிரியரும் மகிழ்ந்து வணங்கினர்!

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.”

அதிகாரம்: *98* பெருமை பாடல்: *972*

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.**

## இதழின் உள்ளே..



| | | | |
|---|---|---|---|
| 1. | பங்குனி உத்திரப் பிரமன் | தமிழாகரர் தெ.முருகசாமி | 6 |
| 2. | மணக்கால் நம்பி | வளவ.துரையன் | 9 |
| 3. | தழல் தூண் அதன் நடுவே ஒரு உருவம் | பேராசிரியர்–சிவப்ரியா | 11 |
| 4. | திருமழிசை ஆழ்வாரின் 'பாத்திறன்' | வேலூர் ம.நாராயணன் | 13 |
| 5. | பங்குனியில் அரன் அருள் பெற்ற நாயன்மார்கள் | | 17 |
| 6. | பிரதோஷம் | | 20 |
| 7. | திருவொற்றியூர் திருத்தலப்பெருமை | இர.தர்மாம்பாள் | 22 |
| 8. | உலகம் உய்ய உதித்த உடையவர் | பெ.ராமநாதபிள்ளை | 25 |
| 9. | பங்குனி உத்திரத் திருநாள் | எம்.என்.ஸ்ரீனிவாசன் | 28 |
| 10. | சொந்தம் | திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்(நினைவலைகள்) | 30 |
| 11. | கண்டேன் கமலமலர்ப்பாதம் | முனைவர் டி.எஸ்.ராமஸ்வாமி | 33 |
| 12. | திருச்சேறை சாரநாதப் பெருமாள் | பனையபுரம் அதியமான் | 37 |




## அருள்மிகு முருகவேள் 108 போற்றிகள்

1. ஓம் அறுமுகச் சிவமே போற்றி
2. ஓம் அறுகுசூடிதன் இளையாய் போற்றி
3. ஓம் அழகினுக் கழகே போற்றி
4. ஓம் அருளினுக் கருளே போற்றி
5. ஓம் அலங்கார நாயக போற்றி
6. ஓம் அநுபூதி நாதனே போற்றி

7. ஓம் அன்பின் அண்ணா போற்றி
8. ஓம் ஆறுமுக அப்பா போற்றி
9. ஓம் இமையோர் இறைவா போற்றி
10. ஓம் இமயப் புகழோய் போற்றி
11. ஓம் இருளினை நீக்குவாய் போற்றி
12. ஓம் இருசுடர் ஆனாய் போற்றி
13. ஓம் ஈசனார் குருவே போற்றி
14. ஓம் ஈரேழ் உலகோய் போற்றி
15. ஓம் உமையருட் செல்வா போற்றி
16. ஓம் உயர்மறைப் பொருளே போற்றி
17. ஓம் எஃக வேலுடையாய் போற்றி
18. ஓம் எமபயம் நீக்குவாய் போற்றி
19. ஓம் எழில் அற்புதனே போற்றி
20. ஓம் ஏறுமயில் ஏறி போற்றி
21. ஓம் ஒப்பிலா இறைவா போற்றி
22. ஓம் ஓங்காரப் பொருளே போற்றி
23. ஓம் ஔவைக் கரசே போற்றி
24. ஓம் கங்கையின் மைந்தா போற்றி
25. ஓம் கடம்பா இடும்பா போற்றி
26. ஓம் கதிர்காமக் கந்தா போற்றி
27. ஓம் கந்தா முருகா போற்றி
28. ஓம் கவிமாலை அணிந்தாய் போற்றி
29. ஓம் கார்த்திகேயனே போற்றி
30. ஓம் காவற் காரனே போற்றி
31. ஓம் காவடி விருப்பனே போற்றி
32. ஓம் குகனென நின்றாய் போற்றி
33. ஓம் குமரகிரி வாசனே போற்றி
34. ஓம் கும்பமுனிக் குருவே போற்றி
35. ஓம் குறத்திக் கோவே போற்றி
36. ஓம் குராவடி வேலனே போற்றி
37. ஓம் குறிஞ்சிக் கிழவா போற்றி
38. ஓம் குன்றம் எறிந்தோய் போற்றி
39. ஓம் குன்றுதோ றாடுவாய் போற்றி
40. ஓம் கூத்தன் மைந்தா போற்றி
41. ஓம் கூத்தாடு மயிலோய் போற்றி
42. ஓம் கொற்றவை குமரா போற்றி
43. ஓம் கொற்றதனி வேலோய் போற்றி
44. ஓம் கோலமயில் குமரா போற்றி
45. ஓம் கோரும்வரம் தருவாய் போற்றி
46. ஓம் சங்கப் புலவா போற்றி
47. ஓம் சரவண பவனே போற்றி
48. ஓம் சகல நலம் அருள்வாய் போற்றி
49. ஓம் சண்முகக் குமரா போற்றி
50. ஓம் சிவகுரு நாதா போற்றி
51. ஓம் சிவசுப்பிர மணியா போற்றி
52. ஓம் சீரலைவாய்த் தேவே போற்றி
53. ஓம் சூர் முதல் தடிந்தாய் போற்றி
54. ஓம் செஞ்சுடர் வேலா போற்றி
55. ஓம் செவ்வேள் பரமா போற்றி
56. ஓம் செந்தில் வாழ்வே போற்றி
57. ஓம் செந்தமிழ்ச் செல்வா போற்றி
58. ஓம் செங்கோட்டு வெற்பா போற்றி
59. ஓம் சேவற் கொடியோய் போற்றி
60. ஓம் சேந்தா முருகா போற்றி
61. ஓம் சைவக் கொழுந்தே போற்றி
62. ஓம் ஞானச் சுடரே போற்றி
63. ஓம் ஞானப் பழமே போற்றி
64. ஓம் தங்க வேலனே போற்றி
65. ஓம் தண்டாயுதபாணியே போற்றி
66. ஓம் தமிழ்மா மறையே போற்றி
67. ஓம் தமிழெனும் அழகே போற்றி
68. ஓம் திகழ்மணி மார்பா போற்றி
69. ஓம் திகழ்மயில் வாகனா போற்றி
70. ஓம் திருச்செந் தூரா போற்றி
71. ஓம் திருப்பரங் குன்றா போற்றி
72. ஓம் திருஆவி னன்குடியாய் போற்றி
73. ஓம் திருவே ரகக்குருவே போற்றி
74. ஓம் திருத்தணிகைத் தமிழே போற்றி
75. ஓம் திருப்புகழ் விருப்பா போற்றி
76. ஓம் திருமால் மருகா போற்றி
77. ஓம் திருவருட் செல்வா போற்றி
78. ஓம் தீமையைத் தீர்ப்பாய் போற்றி
79. ஓம் துங்கக் கொடையோய் போற்றி
80. ஓம் தூ மறைக்கு ஆதி போற்றி
81. ஓம் தெய்வானை கணவா போற்றி
82. ஓம் தேவர்தம் கோவே போற்றி
83. ஓம் நக்கீர நாயகா போற்றி
84. ஓம் நற்றமிழ் வேந்தே போற்றி
85. ஓம் பழநிமலை வாழ்வே போற்றி
86. ஓம் பழமுதிர்ச் சோலையாய் போற்றி
87. ஓம் பன்னிரு தோளாய் போற்றி
88. ஓம் பதினெண்கண் மலர்ந்தாய் போற்றி
89. ஓம் பிணிமுகம் ஏறுவாய் போற்றி
90. ஓம் பிணிக்குலம் ஓட்டுவாய் போற்றி
91. ஓம் பிரணவம் மொழிந்தாய் போற்றி
92. ஓம் பிரமனைக் குட்டினாய் போற்றி
93. ஓம் பிறவா நெறி அருள்வாய் போற்றி
94. ஓம் மலைமகள் மகனே போற்றி
95. ஓம் மன்றாடி மைந்தா போற்றி
96. ஓம் மாயோன் மருகா போற்றி
97. ஓம் முத்தமிழ் முருகா போற்றி
98. ஓம் முத்தைய வேளே போற்றி
99. ஓம் முருகெனும் அழகே போற்றி
100. ஓம் முருகாற்றுப் படையோய் போற்றி
101. ஓம் மூவர்க்கும் முதல்வா போற்றி
102. ஓம் வள்ளி நாயகனே போற்றி
103. ஓம் வழித்துணைக் குழகா போற்றி
104. ஓம் விழித்துணை அழகா போற்றி
105. ஓம் வெற்றிவேல் முருகா போற்றி
106. ஓம் வேடர்தம் மருகா போற்றி
107. ஓம் வையச் சுடரே போற்றி
108. ஓம் வைர வேல் வீரா போற்றி போற்றி.



# பங்குனி உத்திரப் பிரமன்

மனித வாழ்வு காலத்தோடு ஒட்டியது. காலம் என்பதை ஆண்டு, மாதம், வாரம், நாள் எனப் பகுக்கப்பட்டபோது அவைகளுக்கான பெயர்களும் அமைந்தன. அவற்றுள் ஆண்டுக்கான பெயரைத் தவிர்த்து திங்கள், நாள்களுக்கான பெயர்கள் தமிழிலக்கியங்களில் காணப்படுகின்றன.

சூரியன் கீழ்த்திசையில் தோன்றி மேற்குத் திசையில் மறையும் வரை ஒரு நாள் பொழுது என்பதைக் கண்டறிய பல காலம் ஆனாலும் அதை உறுதிப்படுத்த வேண்டி அவற்றிற்கான பெயரை ஞாயிறு, திங்கள், செவ்வாய் என்பதாக அமைத்த காலத்தை மனித குல நாகரிகத் தொடர்ச்சிக்கான காலம் எனலாம். இவ்வளர்ச்சியின் தொடர்ச்சியில் ஒரு முழு நிலா காலத்திற்கும் அடுத்த முழுநிலா காலத்திற்குமான காலத்திற்குச் சித்திரை, வைகாசி, ஆனி என்பதாகப் பெயர் அமைத்ததைக் கற்பனைக்கும் எட்டாத தொன்மைக் காலம் எனலாம்.

இந்தக் காலக்கணிப்பான நாளும் மாதமும் பற்றிய பெயர்களும் குறிப்புகளும் தமிழிலக்கியங்களிலும் இலக்கண நூல்களிலும்

தமிழாகரர்: தெ.முருகசாமி புதுச்சேரி-9.

ஆங்காங்கே பேசப்பட்டாலும் அவற்றை ஒட்டுமொத்தமாக ஒருசேர உணர்த்திக்காட்டும் பாங்காக உள்ளது ஞானசம்பந்தரின் தேவாரமே ஆகும்.

வேயுறு தோளிபங்கன் என்ற தேவாரம் ஞாயிறு முதல் சனி வரையான நாள் பெயர்களைக் குறிப்பது போல மயிலாப்பூர் மட்டிட்ட புன்னை என்ற தேவாரம் ஐப்பசி முதலாகப் பங்குனி ஈறாக ஆறு மாதப் பெயர்களை அடுக்காகக் கூறுகின்றது. பிற மாதப் பெயர்கள் அம்மாதங்களில் நடைபெறும் விழாவைச் சுட்டுவதன் மூலம் குறிப்பாக உள்ளன.

ஞானசம்பந்தர் குறிப்பிடும் ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதத்தின் நட்சத்திரத்தால் சிறப்புறுவதாகத் தெரிகிறது. அவற்றுள் பங்குனியைக் குறிக்கும்போது, "பலிவிழாப் பாடல் செய் பங்குனி உத்திரநாள் ஒலி விழா" என்று உத்திர நட்சத்திரத்தோடு குறிக்கின்றார். இப்பங்குனி உத்திரச் சிறப்பை இன்றும் தமிழகத்தில் சிவாலயந்தோறும் காண முடிகிறது. இச்சிறப்பு ஞானசம்பந்தர் காலத்திற்கு முன்னரே சங்க காலத்தில் உணரப்பட்டதற்கான சான்று புறநானூற்றில் காணப்படுகிறது.

சேரமான் யானைக்கண்சேய் மாந்தரம் சேரல் இரும்பொறை என்ற சேர அரசன் பற்றிய 229ஆம் புறநானூற்றுப் பாட்டில் உத்திர நட்சத்திரம் பற்றிய குறிப்பு வந்துள்ளது. "பங்குனி உயர் அழுவத்து, தலைநாள் மீன் நிலை திரிய'' என்ற தொடர், பங்குனி மாதத்தின் உயர்ந்த நட்சத்திரமாகிய உத்திர நட்சத்திரத்தைத் தலைநாள் மீன் எனக் குறிக்கிறது. இருபத்தேழு நட்சத்திரத்தில் உத்திரத்தை மட்டும் தலைநாள் மீன் என்றதால் பங்குனி மாதத்தில் அந்நாளில் விழா கொண்டாடிய சிறப்பை நுட்பமாக உணர முடிகிறது. அத்தகு சிறப்பும் தலைமையும் உடைய உத்திர நட்சத்திரத்திற்கு முன் எட்டு நாளுக்கும் பின் எட்டு நாளுக்கும் ஆகிய இடைப்பட்ட நாளில் விண்மீன் ஒன்று தீப்பரக்க பூமியில் விழுந்ததாகக் கண்டதால் கூடலூர் கிழார் என்னும் புலவர் சேரனுக்குத் தீங்கு வருமோ என அஞ்சிப் பாடுவதாக அமைந்த பாடல் தான் 229. எனவே, பங்குனி மாத உத்திரம் சிறந்த நாளாகக் கருதப்பட்ட குறிப்பு புறநானூற்றால் உணர முடிகிறது.

இத்தொன்று தொட்ட பங்குனி உத்திரச் சிறப்பு, சங்க காலத்திற்குப் பின்னர் தோன்றிய காப்பிய காலத்திலும் தொடர்ந்தது என்பது இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தாலும் உணர முடிகிறது. பூம்புகாரில் இளவேனிற் காலமாகிய சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரம் கூடிய முழு நிலா (பௌர்ணமி) நாளில் இந்திர விழா நடந்து முடிந்ததாக இளங்கோவடிகள் கூறுகிறார்.

இவ்விழாவின் தொடக்கம் பற்றிக் கூறும்போது, பங்குனி மாதத்தின் சித்திரை நட்சத்திரத்தில் தொடங்கியதாகக் கூறுகிறார். இக்கருத்து சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் உரையால் விளக்கப்பட்டுள்ளது.

பங்குனி முழு நிலாவான உத்திர நட்சத்திற்கு இருபத்தொன்பதாம் நாளாகிய சித்திரை நட்சத்திரத்தில் கொடியேற்றத்துடன் தொடங்கிய இந்திர விழா சித்திரை மாத முழு நிலாவான சித்திரை நட்சத்திர நாளில் முடிந்ததாம். இதில் பங்குனி உத்திரம் இருபத்தொன்பதாம் நாள் என்றது ஒரு திங்களுக்கு 27 நட்சத்திரம் எனக் கணக்கிடுகையில் பங்குனி உத்திரத்திலிருந்து அடுத்த மாத சித்திரையின் உத்திர நட்சத்திரம் வரை 27 நாள் ஆகும். அதன் அடுத்த இரண்டாவது நாள் சித்திரை ஆகும். இதனால் இருபத்தொன்பதாம் நாள் சித்திரை மாத சித்திரை நட்சத்திர நாள் என்பது பொருத்தமான கருத்தாகும்.

எனவே, சித்திரை மாத சித்ரா பௌர்ணமியை உணர அதன் முந்தைய பௌர்ணமியாகிய பங்குனி உத்திரத்தைக் கொண்டு கணக்கிடுவதால் பங்குனி உத்திர நாள் சிறப்புடைய நாளாகக் கருதப்பட்ட கருத்து உண்மையாகிறது.

இத்தகு பங்குனி உத்திர நாளில் தமிழகத்தில் உள்ள முருகப் பெருமான் தலங்கள் தோறும் காவடி எடுத்து விழாக்

கொண்டாடும் சிறப்பு இன்றும் நடந்து வருவதால் பங்குனி உத்திர நாளின் மகிமையை நன்கு உணரலாம்.

இங்ஙனம் முருகன் தலங்களில் பொதுவாகப் பங்குனி உத்திர நாள் சிறப்பாகக் கொண்டாடப் பட்டாலும் சில குறிப்பிட்ட சிவாலயங்களில் திருக்கல்யாண வைபவங்களாகக் கொண்டாடப் படுவதையும் உணரலாம்.

மயிலாப்பூரின் பங்குனிப் பெருவிழா குறிப்பிடத்தகுந்ததாகும். அன்னை காமாட்சி உடனுறை கயிலாசநாதர் வீற்றிருக்கும் காஞ்சிபுரத்தில் திருக்கல்யாண விழா வெகு சிறப்புக்குரியதாகும்.

இதுபோலவே மதுரை மீனாட்சியம்மனுக்கும் சோமசுந்தரக் கடவுளுக்கும் பங்குனி உத்திரத்தில் திருமணம் நடந்ததாகப் பெரும்பற்றப் புலியூர் நம்பி என்பவர் பாடிய திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணத்தில் குறிப்பு உள்ளதால் பங்குனி உத்திரச் சிறப்பை அறிய முடிகிறது.

இத்திருவாலயவாயுடையார் திருவிளையாடல் புராணத்திற்குப் பின்னர் தோன்றிய பரஞ்சோதியார் திருவிளையாடலில் சித்திரையில் மீனாட்சிக்குத் திருமணம் நடந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

புராணத்திற்குப் புராணம் கருத்து மாறுபாடு கதையளவில் உணரப்படும்போது மேலும் சில புதியதைக் காண முடிகிறது. திருவாலவாயுடையார் திருவிளையாடல், பங்குனி உத்திரத்தில் மீனாட்சிக்கு நடந்த திருமணத்தை முருகன், திருமணச் சடங்கு செய்யும் பிரம்மாவாக அவதரித்து அனைவரும் காண கல்யாண வைபவத்தைச் செய்து முடித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

முருகனின் இந்த அவதாரச் சிறப்பால் அவனுக்குச் சடங்குக் கந்தன் என்ற சிறப்புத் திருநாமமும் வழங்கப்பட்டதாகப் பெரும்பற்றப் புலியூர் நம்பி கூறுகிறார். இச்சடங்குக் கந்தன் தான் பின்னாளில் திருப்பரங்குன்றத்தில் தெய்வயானையை மணந்து ஸ்ரீ கல்யாண சுப்பிரமணியக் கடவுளாய் வீற்றிருப்பதாகவும் மக்கள் வழக்காற்றில் காணப்படுகிறது.

இக்கருத்திற்கேற்பவே தற்காலத்தில் மதுரைச் சித்திரைத் திருவிழாவின் திருக்கல்யாண வைபவத்தன்று திருப்பரங் குன்றத்து முருகனும், மீனாட்சியம்மன் கோயிலுக்கு எழுந்தருளுவதைக் காணலாம்.

எனவே, திருப்பரங்குன்ற முருகன், ஆறு படை வீடுகளில் முதலாமவனாகப் பேசப்பட்டுள்ளான் என்பதோடு பரிபாடலில் பாடப்பட்ட முருகன் பற்றிய செவ்வேள் பாடல்கள் யாவும் திருப்பரங்குன்ற முருகனைப் பற்றியே உள்ளதால் திருப்பரங்குன்ற முருகனைப் ''பங்குனி உத்திரப் பிரமன்'' எனப் போற்றி வழிபடுவதில் குற்றமில்லை எனலாம்.


திருக்கோயில்

திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2. முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3. பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4. உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5. உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,


119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

மணக்கால் நம்பியின் இயற்பெயர் "ஸ்ரீராம மிச்ரர்" என்பதாகும். இவர் உய்யக் கொண்டாருடைய பிரதான சீடராவார். இவர் காவேரி ஆற்றின் கரையில் உள்ள மணக்கால் என்று வழங்கப்படும் சிற்றூரில் அவதரித்தார்.

மணக்கால் நம்பி விரோதி வருடத்தில் **(கி.பி.929)** மாசி மாதம், மக நட்சத்திரத்தில், சுக்கில பட்சம், சதுர்த்தசி கூடிய புதன் கிழமையில் தோன்றினார். மேலும் அந்தணர் குலத்தில் 'குமுதாக்ஷர்' எனும் நித்யசூரியின் அம்சமாக அவர் பிறந்தார்.

மணக்கால் நம்பி பன்னிரண்டு ஆண்டுகள் உய்யக் கொண்டாரின் சீடராக இருந்தார். மேலும் அவர் தமது குருவிற்குப் பல கைங்கர்யங்களைச் செய்து கொண்டு வந்தார். இக்காலக்கட்டத்தில் உய்யக்கொண்டாரின்



# மணக்கால் நம்பி

தேவியான ஆண்டாள் பரமபதித்துத் திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

அது முதற்கொண்டு மணக்கால் நம்பி, தம் ஆச்சாரியாரின் இல்லக் காரியங்கள் அனைத்தையும் செய்யலாயினார். ஒரு நாள் உய்யக் கொண்டாரின் பெண் குழந்தைகள் இருவரையும் மணக்கால் நம்பி நீராட்டி அழைத்துக் கொண்டு வந்தார். வரும் வழியில் இருந்த வாய்க்கால் சேறாய் இருந்ததால் குழந்தைகள் அதைத் தாண்ட முடியாமல் தவித்தனர். உடனே மணக்கால் நம்பி அந்தச் சேற்றில் படுத்துக் கொண்டார். தம் முதுகில் அடி வைத்து அக்குழந்தைகளைக் கடந்து போகும்படி செய்தார்.

இதையறிந்த உய்யக்கொண்டார், "இப்படியும் செய்ததே" என்று மிகவும் கொண்டாடித் தம் திருவடிகளை மணக்கால் நம்பியின் முடிமேல் வைத்து ஆசீர்வதித்தார். அதுமுதற்கொண்டுதான் மணற்கால் நம்பி எனும்

திருநாமம் அவருக்கு ஏற்பட்டது.

மேலும் உய்யக்கொண்டார், "உமக்கு நாம் என்ன செய்ய வேண்டும்," என்று கேட்டார். "தங்களுக்குப் பணிவிடை செய்யும் பேறு பெற்றுத் தங்கள் திருவடிகளை ஏற்றேன். இதை விட வேறு என்ன வேண்டும்," என்று மணக்கால் நம்பி பணிவுடன் விடையிறுத்தார். இதனால் மேன்மேலும் மகிழ்ச்சி கொண்ட உய்யக் கொண்டார், நம்பிக்கு 'த்வயார்த்தத்தை" உபதேசித்தார். மேலும் திவ்ய பிரபந்தங்களையும் அவற்றின் பொருளையும் அளித்தருளினார்.

நாதமுனிகள் தம் அந்திம காலத்தில் கூறிய ஆணைகள் எல்லாவற்றையும் நிறைவேற்ற வேண்டுமென உய்யக்கொண்டார் மணக்கால் நம்பியிடம் கூறி திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

மணக்கால் நம்பிக்கு, ''ஆளவந்தார், திருவரங்கப் பெருமாள் அரையர், தெய்வத்துக்கரசு நம்பி, பிள்ளையரசு நம்பி, சிறுபுள்ளூருடையார் பிள்ளை, திருமாலிருஞ்சோலை தாயார், வங்கி புரத்தாச்சி, கோமடத்துத் திருவிண்ணகரப்பன்" ஆகியோர் சீடர்களாய் இருந்தனர்.

இக்காலத்தில் வீரநாராயணபுரத்தில் நாதமுனிகளின் மகனான ஈசுவர முனிகளுக்கு 'யமுனைத் துறைவர்' அவதரித்தார். இக்குழந்தையே பின்னாளில் ஆளவந்தார் எனும் திருநாமம் பெற்று விளங்கியது. ஆக்கியாழ்வான் எனும் அரசு புரோகிதனை வென்றதால் ஆள வந்தாருக்கு அரசன் தனது பாதி ராஜ்யத்தையே அளித்தான். ஆளவந்தாரும் அதைக் கவனித்து வந்தார்.

ஆளவந்தார் அரசனுக்குரிய ஆடம்பரங் களுடனும் அரண்மனைக்குரிய கட்டுக் காவல்களுடனும் இருந்ததால், எளிதாக மணக்கால் நம்பியால் அவரைக் காண முடியவில்லை. மணக்கால்நம்பி மிகவும் கவலை கொண்டார்.

ஆளவந்தாருக்குத் தூதுவளைக் கீரை மிகவும் பிடிக்கும் என்பதைத் தெரிந்து கொண்ட மணக்கால்நம்பி நாள்தோறும் ஆளவந்தாருக்காக அவரறியாமல் அக்கீரை கொண்டு வந்து கொடுத்திருந்தார்.

இவ்வாறு ஆறு மாதங்கள் கழிந்த பின்னரும், ஆளவந்தாரைப் பார்க்க முடியவில்லை. எனவே, இரண்டு மூன்று நாட்கள் கீரை கொடுப்பதை மணக்கால் நம்பி தவிர்த்து விட்டார். தமது உணவில் சில நாட்களாகக் கீரை இல்லாததை கண்ட ஆளவந்தார் ஏன் எனக் கேட்டார். சமையல்காரரும், "ஆறு மாத காலமாக ஒரு பிராமணர் தூதுவளைக் கீரை கொண்டு வந்து கொடுத்தார். சில நாட்களாக அவர் வரவில்லை,'' என்று கூறினார். ''அவர் வந்தால் என்னிடம் அழைத்து வாருங்கள்," என்று ஆளவந்தார் பணித்தார்.

மணக்கால் நம்பி மறுபடி கீரையைக் கொண்டு வர, அவரை ஆளவந்தாரிடம் அழைத்துச் சென்றனர். மணக்கால்நம்பியிடம் ஆளவந்தார், "தங்களுக்கு என்ன வேண்டும்? பணமா? கிராமமா?" எனக் கேட்டார்.

"எனக்கு எதுவும் வேண்டாம். தங்களின் முன்னோர்கள் என்னிடம் கொடுத்துச் சென்ற நிதியைத் தங்களிடம் ஒப்படைக்கும் வரையில் உங்களைத் தடையின்றிக் காணச் செய்ய வேண்டும்," என்று மணக்கால்நம்பி கூறினார்.

ஆளவந்தாரைத் தொடர்ந்து சென்று கீதையின் பொருளை உபதேசித்தார். இறுதியில் சரம ஸ்லோக அர்த்தத்தைக் கூறினார். ஆளவந்தாரின் ஆணவம் அடங்கியது; உலகப் பற்று நீங்கியது; பெருமாளைக் காணும் ஆவல் மிகுந்தது.


மணக்கால் நம்பி ஆளவந்தாரைத் திருவரங்கம் அழைத்துச் சென்றார். பெரிய பெருமாளைக் காட்டினார். அத்திருமேனியைச் சேவித்த ஆளவந்தார் அதையே தஞ்சமாகக் கருதி துறவறம் மேற்கொண்டார். காஷாயதிரி தண்டங்களை ஏற்றுக் கொண்டார். மணக்கால் நம்பியிடம் பல உபதேசங்கள் பெற்று திருவரங்கத் திலேயே தங்கி வைணவம் வளர்த்தார்.

பிறகு மணக்கால் நம்பி, "நீவீர் யோக ரகசியத்தைக் குருகை காலப்பனிடம் அறிந்து கொண்டு, உம்மைப் போலவே இச்சமயம் வளர்க்க ஒருவரை உண்டாக்க வேண்டும்," என்று ஆளவந்தாருக்கு ஆணையிட்டுத் திருநாடு அலங்கரித்தார்.

**-வளவ.துரையன்.**

# தழல் தூண் அதன் நடுவே ஒரு உருவம்

**ஜோ**தி சிவமான அடி முடியில்லாத லிங்கப் பரம்பொருளுக்கு உரிய திருவிழா கார்த்திகை தீபம். அந்த லிங்கத்தில் இருந்து அடியும் முடியும் மறைந்துள்ள வண்ணம் வெளிப்பட்டு அருளி பிரம்ம விஷ்ணுக்களுக்குக் காட்சி தந்த பரஞ்சோதிப் பெருமானாகிய லிங்கோற்பவருக்கு உரிய திருவிழா மகா சிவராத்திரி. நடன சிவமான நடராஜருக்கு உரிய திருவிழா ஆருத்ரா தரிசனம். ஞானசிவமான தட்சிணாமூர்த்திக்கு உரிய திருவிழா காமதகனம். சிவாலயங்களில் மூலவரான லிங்கப் பரம்பொருளைச் சுற்றி தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர், நடராஜர் உள்ளனர். இந்த நான்கு திருக்கோலங்களுமே வாழ்க்கைக்கு மட்டுமின்றி உலகத்திலும் திசை காட்டும் வடிவங்களாகும். அளவிட முடியாதபடி பாதாளம் வானலோகம் ஆகிய எல்லா உலகங்களிலும் அண்ட சராசரங் களிலும் நிறைந்து நின்ற அரும் பெரும் ஜோதியான லிங்கத்தில் இருந்து பெரிய பெருமானாகிய லிங்கோற்பவர் மாசி மாதம் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியன்று வெளிப்பட்டு அருளி பிரம்ம னுக்கும், விஷ்ணுவிற்கும் திருக் காட்சி தந்த திருநாளே மகா சிவராத்திரிப் புண்ணியப் பெருநாள். மற்ற மாதம் வரும் கிருஷ்ணபட்ச சதுர்தசி மாத சிவராத்திரி.



வளம்பட்டு அலர் மலர் மேயவன்
மாலும் ஒருவகையால்
அளம்பட்டு அறியொண்ணாவகை
அழலாகிய அண்ணல்
உள்ம் பட்டு எழு தழல் தூண் அதன்
நடுவே ஒரு உருவம்
விளம்பட்டு அருள் செய்தான் இடம்
விரிநீர் வியலூரே

என்று தெய்வ மழலை திருஞான சம்பந்தர் பாடுகின்றார். எந்தவிதமான ஆசா பாசங்களுக்கும்

தீமைகளுக்கும் உலகியலுக்கும் இடம் இன்றி முற்றிலும் பக்தி, சிரத்தை பூஜை, விரதம், தியானம், துதி என இரவும் பகலும் மிகப் புண்ணிய நினைவுகளுடன் மிகத் தூய்மையுடன் கொண்டாடப்படும் திருவிழா மகா சிவராத்திரி. லிங்கப் பரம்பொருள் உள்ள கருவறைச் சுற்றின் பின்புறம் செழுஞ்சடர் மூர்த்தியாகிய லிங்கோற்பவர் எழுந்தருளி உள்ளார். திருவாதவூர், திருமழபாடி முதலிய திருத்தலங்களில் லிங்கோற்பவர் நான்கு தூண் மண்டபத்தில் உள்ளார். திருவடியும் திருமுடியுச்சியும் மறைந்துள்ள ஜோதிமூர்த்தியான லிங்கோற்பவரின் திருவுருவம் இரண்டு வகையில் அமைந்துள்ளது.

லிங்கத்தின் மேல் அன்னப் பறவையும் கீழே பன்றியும் இருக்க லிங்கோற்பவர் காட்சி தருவது ஒருவகை. இது பிற்கால அமைப்பு. மற்றொரு வகையில் வலது புறம் பிரம்ம தேவனும் இடதுபுறம் விஷ்ணுவும் கை கூப்பித் துதித்து நிற்க அவர்களுக்கு லிங்கோற்பவர் காட்சி தருகின்றார். இது பழங்கால அமைப்பு மற்றும் இது புராண வரலாற்று நிகழ்ச்சிக்குப் பொருத்தமான அமைப்பு ஆகும்.

இத்தகைய அமைப்பினை லிங்கத் தலங்களான திருவாரூர், நாகை காரோணேஸ்வரர் திருக்கோயில், திருக்கோளிலி (திருக்குவளை) ஆகியவற்றிலும், அஷ்ட வீரட்டத் திருத்தலங்களான திருவழுவூர், திருப்பறியலூர் ஆகியவற்றிலும் திருவாவடுதுறை, தென் குரங்காடுதுறை, குத்தாலம் (திருத்துருத்தி), தாராசுரம், சாக்கோட்டை (திருக்கலயநல்லூர்), மருதாந்த நல்லூர் (திருக்கருக்குடி), திருக்கடுவாய்க்கரைப் புத்தூர், திருப்பூவனூர், கோனேரி ராஜபுரம் (திருநல்லம்), திருக்கொண்டீஸ்வரம், இராமனதீஸ்வரம், மீயச்சூர் மேகநாதர் திருக்கோயில், திருக்கொள்ளம்புதூர் போன்று கும்பகோணம் மற்றும் திருவாரூரைச் சுற்றியுள்ள பலப்பல ஈசன் கோயில்களிலும் கண்டு களிக்கலாம்.

இருபுறமும் பிரம்ம விஷ்ணுக்கள் இல்லாத லிங்கோற்பவர் திருவுருவத்தில் கீழே திருமாலுக்கு உடல் விஷ்ணுவாகவும், முகம் பன்றியாகவும் இருப்பது பெரும்பான்மை. மேனியின் மேற்பகுதி பிரம்மனாகவும், கீழ்ப்பகுதி அன்னமாகவும் இருக்கும். பிரம்மனைக் கொண்ட லிங்கோற்பவர் மதுரைக்கு அருகே உள்ள திரு ஆப்புடையார் கோயில் (திருஆப்பனூர்) வெளிப்பிரகாரத்தில் உள்ளார்.

இந்த அரிய அமைப்பு சென்னையை அடுத்த தாம்பரத்திற்கு அருகேயுள்ள மாடம்பாக்கம் தேனுபுரீஸ்வரர் திருக்கோயில் தூணிலும் உள்ளது. புதுக்கோட்டைக்கு அருகேயுள்ள திருமயம் என்ற தலத்தில் உள்ள சத்தியகிரீஸ்வரர் குகைக் கோயிலில் (குடைவரைக் கோயில்) லிங்கப் பரம்பொருளுக்கு நேரே எதிரில் கூரையை முட்டும் அளவிற்கு மிகப் பெரிய லிங்கோற்பவர் இரண்டு கரங்களுடன் காட்சி தருகின்றார்.

இத்தகைய பெரிய பெரிய திருவுருவங்களை அமைப்பது பல்லவர்களின் கலைச் சிறப்பு. திருவையாற்றுக்கு அருகேயுள்ள திருக்காட்டுப்பள்ளி அக்கினீஸ்வரர் திருக்கோயிலிலும், மதுரை சுந்தரேஸ்வரர் திருக்கோயிலிலும் லிங்கோற்பவருக்குத் தனி சந்நிதி உள்ளது.

சுடர்க் கொழுந்து ஈசரான லிங்கோற்பவருக்குத் தனிச் சந்நிதி இல்லாதது மிகப் பெரிய குறையே. எங்கும் நிறைந்து இருந்தாலும் கண்களுக்குப் புலப்படாமல் மறைந்து இருத்தல், வெளிப்பட்டுக் காட்சி கொடுத்து அருளுதல் என்ற இரண்டு தொழிலைக் குறிக்கும் வகையில் லிங்கோற்பவரது திருவுருவம் உதய திசை அஸ்தமன திசை என்ற இரண்டு திசைகளாகிய கிழக்கிலோ மேற்கிலோ அமைந்துள்ளது.

பிரம்ம விஷ்ணுக்களுக்கு சிவஞானம் அருளி லிங்கோற்பவர் காட்சி கொடுத்த நாள் புதன் கிழமை. ஆதலால் புதன் கிழமை அன்று லிங்கோற்பவரை வழிபடுவது மிகவும் விசேஷமாகும்.

**–பேராசிரியர் சிவப்ரியா.**

# திருமழிசை ஆழ்வாரின் 'பாத்திறன்...'

திருமழிசை ஆழ்வார் கி.பி.6 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 7ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தொண்டை நன்னாடாம் திருமழிசையில் வாழ்வாங்கு வாழ்ந்த திருமால் அடியவர். ஆழ்வார்கள் பன்னிருவருள் நான்காமவர். பக்தி சாரர் என்பது இவரது சிறப்புப் பெயர். இன்றைய நாளில் திருமழிசை என்னும் திருத்தலம் வேலூர் – சென்னை நெடுஞ்சாலையில் பூந்தமல்லி என்றழைக்கப்பெறும் பூவிருந்தவல்லிக்கு மேற்கே 3 கிலோ மீட்டர் தொலைவில் திருப்பதி செல்லும் பாதையில் அமைந்துள்ளது.



திருமால் பக்தியில் ஆழ்ந்து ஆழ்ந்து அவரது பெருமைகளைப் பாடுவதையே பிறவி நோக்கமாகக் கொண்டவர்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். ஆழ்வார்களின் பாடல் தொகுப்பு. 'நாலாயிர திவ்யப் பிரபந்தம்' என்றழைக்கப் படுகின்றது. தேனெனத் தித்திக்கும் சுவைத் தமிழில் திருமழிசை ஆழ்வார் திருச்சந்த விருத்தம் 120 பாடல்கள். நான்முகன் அந்தாதி 96 பாடல்கள் பாடியருளியுள்ளார். விருத்தப் பாடல்கள் ஓசை நயம் மிக்க சந்தப் பாடல்களாக அமைந்து நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன. 'திரு' எனும் சிறப்பு அடைமொழி பெற்று 'திருசந்த விருத்தம்' எனத் திகழ்கின்றது. நான்முகன் அந்தாதி நேரிசை வெண்பா யாப்பில் அமைந்து அந்தாதி மாலையாகப் பொலிகின்றது. அந்தம் என்றால் இறுதி – முடிவு – நிறைவு என்றெல்லாம் பொருள்படும். 'ஆதி' என்றால் முதல் – தொடக்கம்– ஆரம்பம் என்றெல்லாம் பொருள்படும். ஆக, அந்தாதி என்றால் அந்தம் + ஆதி என்றாகும். ஒரு பாடலின் இறுதி அடுத்த பாடலின் முதல் சீராகவோ சொல்லாகவோ இயல்பாகவும் – இன்னிசை யாகவும் வந்து அமையும் வண்ணம் பாடப் பெறுவதாகும்.

கவிமாமணி டாக்டர் வேலூர் ம.நாராயணன்

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் திகழும் திருமழிசை ஆழ்வாரின் திருச்சந்த விருத்தம் நான்முகன் அந்தாதி இவற்றுள் சில பாடல்களைத் தெரிந்தெடுத்து, அவற்றினின்றும் திருமழிசை ஆழ்வாரின் பாடல் திறனைப் போற்றுவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

தாம் கருதுகின்ற பாடு பொருளை கவிஞர் ஒரு குறிப்பிட்ட யாப்பிற்குள் கொண்டு வந்து மரபு வழுவாமல் பாடுவதென்பது உயரிய கலை; அதற்கு மொழியறிவும், இனிமையாகப் பாடுந் திறமும் –இடையராத பயிற்சியும் வேண்டும். இந்தப் பண்புகள் யாவையும் குறைவறப் பெற்றவராகத் திகழ்கின்றார் திருமழிசை ஆழ்வார்.

***'விண்கடந்த சோதியாய்! விளங்கு***
***ஞான மூர்த்தியாய்***
***பண்கடந்த தேசம் மேவு***
***பாவநாச நாதனே!***
***எண்கடந்த யோகினோடு இரந்து***
***சென்று மாணியாய்***
***மண்கடந்த வண்ணம் நின்னை யார்***
***மதிக்க வல்லரே...?!' (778)***

இந்தப் பாடலை வாய்விட்டுப் படித்தால், ஓசைநயம் எனும் சந்த நயம் கொஞ்சி விளையாடுவதைக் காணலாம். இதன் பொருள்: 'விண்ணைக் கடந்த வீறொளி நீ! அறிவுத் தலைவன் நீ! எழுதாக் கிளவியாம் வேதங்களுக்கும் எட்டாத வான் நாட்டவன் நீ! எண்ணற்கரிய பண்பாளனே! குறளுருவிலே சென்று நெடுமாலாய் உலகளந்த உன்னை அளந்து காண்பவர் உண்டோ?' என்பதாகும்.

***'மரம்கெட நடந்து அடர்த்து, மத்த***
***யானை மத்தகத்து***
***உரம்கெடப் புடைத்து, ஓர் கொம்பு***
***ஒசித்து***
***உகந்த உத்தமா!***
***துரங்கம் வாய் பிளந்து மண்அளந்த***
***பாத!***
***வேதியர் வரம் கொளக்***
***குடந்தையுள் கிடந்த***
***மாலும் அல்லையே!' (809)***

மரமான அரக்கர்களை அழித்தும், குவலயாபீட யானையின் கொம்புகளை முரித்தும் வென்ற மேலோனே! குதிரை வடிவக் கேசியைக் கொன்றவனே! உலகளந்தவனே! வேதியர் வரங்களைப் பெறத் திருக் குடந்தையில் கண் வளரும் ஆராவமுதன் அன்றோ! என்பது பாடலின் இனிய பொருளாகும்.

***'ஊனில்மேய ஆவிநீ; உறக்கமோடு***
***உணர்ச்சிநீ***
***ஆனில்மேய ஐந்தும் நீ; அவற்றுள்***
***நின்ற தூய்மை நீ***
***வானினோடு மண்ணும் நீ; வளங்கடற்***
***பயனும் நீ***
***யானும் நீ; அது அன்றி எம்பிரானும்***
***நீ இராமனே! –(845)***

ஆம்! இப்பாடலின் சந்த நயம் நம்மை கம்ப ராமாயணத்திற்கு அழைத்துச் செல்கின்றது. கும்பகர்ணனை எழுப்ப உலக்கையால் அவனைக் குத்துகிறார்கள். அப்பொழுது கம்பன் இயற்றிய பாடல்! 'உறங்குகின்ற கும்பகர்ண! உங்கள் மாய வாழ்வெலாம்...!' எனத் தொடங்கி மேற்காணும் பாடலின் சந்த நயத்தோடு ஒத்திருப்பதை உணரலாம் சரி! இத்திருச்சந்த விருத்தத்தின் பொருள் என்ன?

***'இராமனே! நீயே என் உயிர்; நீயே***
***என் உறக்கம்***
***நீயே உணர்ச்சி; நீயே ஆவின் பால்,***
***நெய், தயிர்,***
***மோர், கோமயம் நீயே! அவற்றின்***
***தூய்மை நீயே!***
***விண்ணும் மண்ணும் நீயே! கடலும்***
***நீயே! நானே***
***நீ! நீயே நான்! என் தலைவனும்***
***நீயே...!***

என்பதாகும். இதோ மற்றுமொரு இனிய சந்தப் பாடல்:

***'மண்ணை உண்டு அமிழ்ந்து பின்***
***இரந்துகொண்டு அளந்து மண்***
***கண்ணுள் அல்லது இல்லை என்று***
***வென்ற காலம் ஆயினாய்!***
***பண்ணை வென்ற இன்சொல் மங்கை***
***கொங்கை தங்கு பங்கயக்***
***கண்ண! நின்ன வண்ணம் அல்லது***
***இல்லை***
***எண்ணும் வண்ணமே...' (856)***

'உலகை உண்டும் உமிழ்ந்தும், பின் பிச்சை

ஏற்றும் உலகளந்தும் இவ்வுலகம் தன் அருள் நோக்கினாலன்றி நிலைக்காது என ஆட்படுத்தியவனே! இனிய மொழியுடைய திருமகளின் காதலனே! தாமரைக் கண்ணா! உன் திருமேனியைத் தவிர வேறு எண்ணும் எண்ணமில்லை' என்று இப்பாடலின் தெளிந்த பொருளாகும்.

'மாலவனே! நீ பிறரின் ஏவலின்றியே சின்னஞ்சிறுவடிவும், பெரிய பேருருவும் காட்டிய பெருமாளே! உன்னை எதிர்த்தவர்களின் தீக்குணங்களை ஒழித்தவனே! வேத மறையோர்கள் உம்மை வாழ்த்துவது போல் நானும் உம்மைப் போற்றிப் புகழுவேன்' என்று சொல்ல விழையும் திருமழிசை ஆழ்வார். அதனை இவ்வாறு சந்தமாகப் பாடியுள்ளார்.

'சுருக்குவாரை இன்றியே
சுருங்கினாய், சுருங்கியும்
பெருக்குவாரை இன்றியே பெருக்க
மெய்து பெற்றியோய்!
செருக்குவ்ார்கள் தீக்குணங்கள் தீர்த்த
தேவ தேவன் என்று
இருக்குவாய் முனிக்கணங்கள் ஏத்த
யானும் ஏத்தினேன்..!' (860)

இனி. நான் முகன் அந்தாதியின் மேன்மையைக் காண்போம்.

படைத்தல் – காத்தல் – அழித்தல் எனும் முத்தொழில்களையும் முறையே பிரம்மன் அதாவது நான்முகன் – நாராயணன் – சிவபெருமான் ஆகியோர் செய்வதாகக் கூறுவது மரபு. இங்கே. திருமால் மேலுள்ள பக்தியினால் திருமழிசை ஆழ்வார் நான் முகனைப் படைத்தவரும் திருமால் தான் என்பதனை முதன்மைப்படுத்தி,

நான்முகனை நாராயணன்
படைத்தான்: நான் முகனும்
தான் முகமாய்ச் சங்கரனைத் தான்
படைத்தான் – யான் முகமாய்
அந்தாதி மேலிட்டு அறிவித்தேன்
ஆழ்பொருளை
சிந்தாமல் கொள்மின் நீர் தேர்ந்து
(2382)

என்று பாடியுள்ளார். அந்தாதியின் நிறைவுப் பாடலாக,

'இனி அறிந்தேன் ஈசற்கும்நான்
முகற்கும் தெய்வம்
இனி அறிந்தேன் எம்பெருமான்!
உன்னை
இனி அறிந்தேன்
காரணன் நீ: கற்பவை நீ: நல்கிரிசை –
எனையாளும்
நாராணன் நீ நன்கறிந்தேன் நான்...'
(2477)

என்று நிறைவு செய்துள்ளார். பாடல்கள் அனைத்தும் நேரிசை வெண்பா யாப்பில் – தேர்ந்த சொற்களில் – தெளிவான கருத்துக்களில் அமைந்து படிப்போர்க்குப் பரசவம் ஊட்டுகின்றன.

திருமால் எத்தகைய ஆற்றல் பெற்றவராம்! அனைவரும் விரும்பத்தக்க திருமேனியர். மிகவும் வியத்தகு வடிவுடையவர்: இராம அவதாரத்தில், புருவங்கள் இரண்டிற்குமிடையே ஒரு யோசனை தொலைவுடைய அகன்ற முகமுடைய கும்ப கர்ணனை ஒரு கணையால் அடித்து முடித்தவர் திருமால்' என்கிறார் இப்பாடலில் திருமழிசை ஆழ்வார்.

'உகப்பு உருவன் தானே: ஒளி உருவன்
தானே
மகப்பு உருவன் தானே: மதிக்கில் –
மிகப் புருவம்
ஒன்றுக்கொன்று ஓசனையான் வீழ, ஒரு
கணையால்
அன்றிக் கொண்டு எய்தான் அவன்'
(2410).

முன்னோர் மொழி பொருளே அன்றி, அவர் மொழியும் பொன்னே போல் போற்றுவது இலக்கிய மரபு. இதற்கு இலக்கியப் படைப்பாளர்க்கு பழைய இலக்கியங்களில் நல்ல புலமையும் முழுமையான ஈடுபாடும் இருத்தல் வேண்டும். நம் திருமழிசை ஆழ்வார்க்கு இவை நன்கு வாய்க்கப் பெற்றிருந்தன என்பதற்கு ஒரு பாடல் சான்று:

'வித்தும் இடல் வேண்டும் கொல்லோ
விடையடர்த்த
பத்தி உழவன் பழம் புனத்து?
–மொய்த்தெழுந்த
கார்மேகம் அன்ன கருமால் திருமேனி
நீர்வானம் காட்டும் நிகழ்ந்து' (2404)

வானின் கார்முகில் திருமாலின் திருமேனியைக் காட்டி நம்மைப் பக்தி நெறிக்கு உய்விப்பதால், நப்பின்னையைப் பெற ஏழு எருதுகளை அடக்கிய திருமால் பக்தர்கட்கு உரிய நிலங்களில் விதைகளும் தூவ வேண்டுவதில்லை. தானாகவே பயிர் விளைந்து வாழ்வைச் செழிக்கச் செய்யும் என்பதின் பொருள். இவ்வெண்பாவில், நம் வள்ளுவரின்

'வித்தும் இடல் வேண்டும் கொல்லோ?
விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்' (குறள்–85)

எனும் குறட்பா முழுமையாக நிழலாடுவதைப் பார்க்கின்றோம்.

திருவேங்கட மலையைப் போற்றிப் பாடாத ஆழ்வார்கள் இல்லை. நம் திருமழிசை ஆழ்வாரும் தம் மனத்திற்குள் உகந்த வகையில் இவ்வாறு பாடுகின்றார்:

'நன்மணி வண்ணன் ஊர் ஆளியும்
கோளரியும்
பொன்மணியும் முத்தமும் பூ – மரமும்
– பன்மணி நீ
ரோடு பொருது உருளும் கானமும்
வானரமும்
வேடும் உடை வேங்கடம்...' (2428)

இதன் தெளிந்த பொருள். 'யாளிகளும், சிங்கங்களும், பொன்னும், மாணிக்கங்களும், முத்துகளும், பூத்த மரங்களும், பலவகை மணிகளும், அருவிகளோடு கலந்து விழும் காடுகளும், அக்காடுகளில் உள்ள வானரங்களும், வேடர்களும், சூழ்ந்தது நீலமேனியன் திருவேங்கட மலை' என்பதாகும்.

மழலையர் சொற்கேட்டல் சிலருடைய செவிக்கு இன்பம்: நல்ல இனிய இசை கேட்பது சிலரது செவிக்கு இன்பம் தரும். இங்கே . நம் திருமழிசை ஆழ்வார்க்கு சதாசர்வ காலமும் திருமாலின் திருநாமத்தைக் கேட்டுக் கொண்டிருப்பதே அவரது செவிகளுக்கு இன்பம் தருகின்றதாம்: இது இறையன்பின் கொடு முடி! இதோ பாடல்:

'செவிக்கின்பம் ஆவதுவும்
செங்கண்மால் நாமம்
புவிக்கும் புவியதுவே கண்டீர் –
கவிக்கு
நிறை பொருளாய் நின்றானை



நேர்பட்டேன்: பார்க்கில்
மறைப் பொருளும் அத்தனையே தான்'
(2450).

புவிமிசை நன்முறை வாழ விழைவோர்க்கும் உதவும் திருப்பெயரும் அதுவே: எம் கவிதைகளின் பாடுபொருளாய்த் திகழும் திருமாலை நேரெதிர் சந்தித்தேன்: ஆம்! நான் மறைகளும் ஆராய்ந்து கூறும் திரண்ட பொருளும் அவனே! என அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறார் திருமழிசை ஆழ்வார்.

இத்துணை 'பாத்திறன்' பெற்றிருந்த திருமழிசை ஆழ்வார் தனிப் பெருங் காவியம் ஒன்றினை இயற்றித் தந்திருந்தால் தமிழுலகம் காலங்கள் தோறும் அவருக்கு நிச்சயம் நன்றி பாராட்டி இருக்கும். எனினும் அந்தக் குறை தெரியா வண்ணம் இவரது திருச்சந்த விருத்தமும், நான்முகன் அந்தாதியும் திகழ்கின்றது என்பதில் ஐயமில்லை.

# பங்குனியில் அரன் அருள் பெற்றவர்கள்

**காரைக்காலம்மையார்**

கடற்கரையில் சங்குகள் உலவும் கழிகளுடன் கூடிய வளமையான நகரம் காரைக்கால். அங்கு வணிகர்கள் அறநெறியுடன் வாழ்ந்தார்கள். வணிகர்குலத் தலைவர் தனதத்தர். அவர் செய்த தவப் பயனாகப் புனிதவதியார் அவதரித்தார். அறிவு தோன்றிய காலந்தொட்டு சிவபக்தி உடையவராய் விளங்கினார்.



காரைக்காலமையார்

நாகப்பட்டினத்தில் வாழ்ந்த நிதிபதி என்பானுடைய புதல்வன் பரமதத்தனை அம்மையார் மணந்தார்கள். காரைக்காலில் இல்லறம் புரிந்து இனிது வாழ்ந்தார்கள். சிவனடியார்களுக்கு வேண்டுவன அனைத்தும் அளித்து அன்பு செய்தார்.

பரமதத்தனைக் காண வந்த நண்பர்கள் இரண்டு மாங்கனிகள் தந்தார்கள். அம்மையார் அவற்றை வாங்கி உள்ளே வைத்தார்கள்.

அப்போது ஒரு சிவனடியார் பசித்து வந்தார். அம்மையார் அவரை வரவேற்றார். கறியமுது தயாராகவில்லை. திருவமுது மட்டும் ஆயத்தமாக இருந்தது. அன்னம் படைத்து, கறியமுதுக்குப் பதிலாக ஒர மாங்கனியைப் படைத்தார். அவர் உண்டு உவந்து வாழ்த்திச் சென்றார்.

நண்பகல் கணவன் வர அமுது படைத்து மாங்கனியை இட்டார். அதனை, உண்ட அவன் சுவையின் மிகுதியால் திருப்தியடையாது மற்றொரு கனியையும் படைக்குமாறு பணித்தான்.

அம்மையார் உள்ளறையில் சென்று பசுபதியைப் பரவி வேண்டி நின்றார். பரமனருளால் கிடைத்த ஒரு பழத்தைப் பதி கையில் இட்டார். அவன் அதனை அருந்தி, 'இது மூவுலகிலும் பெறுதற்கரிய கனி. இது பெற்றது வேறு எங்கு?' என்று கேட்டான். அம்மையார், 'சிவபிரான் தந்தது,' என்றார். நம்பாத அவன் 'இன்னொரு கனி கொண்டு வா பார்க்கலாம்,' என்றான். அம்மையார் வேண்ட மற்றொரு கனி திருவருளால் கிடைத்தது. அதனை அவன் கையில் இட்டார். அது கண்டு அவன் அச்சமும் அதிசயமும் அடைந்தான். அம்மையாரைத் தெய்வமாகக் கருதினான். அவருடன் வாழ அஞ்சினான். மரக்கலம் ஏறி அயல்நாடு சென்றான். வாணிபம் புரிந்து பொருளுடன் பாரத நாடு வந்தான். பாண்டிய நாட்டில் ஒரு பட்டினத்தில் தங்கி வாணிபம் புரிந்தான். அங்கே ஒரு வணிகருடைய புதல்வியை மணந்தான். பெண்மகவு பிறந்தது. தன் வழிபடு

கடவுளாகிய அம்மையார் பேரை, புனிதவதி என்று சூட்டினான்.

இவன் இங்கிருக்கும் செய்தி அறிந்து சுற்றத்தார் புனிதவதியைச் சிவிகையில் ஏற்றிக் கொண்டு வந்தார்கள். அம்மையாரது வரவினை அறிந்த பரமதத்தன் அஞ்சி மனைவியும் மகளும் சுற்றமும் சூழ எதிர் சென்று

அடிபணிந்தான். 'இவர் மானுடம் அல்லர்' என்று முன் நடந்த நிகழ்ச்சியைக் கூறினான். எல்லோரும் அம்மையாரை இறைஞ்சினார்கள்.

ஊனடைந்த உடற் சுமை வேண்டா என உதறவிட்டு, சிவகணப் பேய் வடிவம் பெற்று விண் வழியே கயிலை வரை சென்று, அங்குத் தலையினால் நடந்து மலையின் மீது ஏறினார்.

அம்மை உமாதேவி 'இவர் யார்' என வினவினார்.

சிவபெருமான் 'நமது அம்மை' என்று கூறி 'அம்மையே வருக' என்று அருளிச் செய்தார். 'அம்மா' என்று இதுகாறும் அழைக்காத சிவபெருமான் திருவாக்கு இன்று அம்மா என்று அழைத்தது.

'அப்பா!' என்று ஆண்டவன் அடிமலர் மீது வீழ்ந்து தொழுதார். என்ன வரம் வேண்டும் என்று விடையவர் வினாவினார்.

இடையறாத அன்பு, பிறவாமை; பிறந்தால் உன்னை மறவாமை, ஆடுங்கழலின் கீழ்ப்பாடும் பணி. இந்த நான்கு வரங்களைக் கேட்டார் அம்மையார்.

**இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்**
**வேண்டுகின்றார்**
**பிறவாமை வேண்டும் மீண்டும்**
**பிறப்புண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும்**
**வேண்டும் நான் மகிழ்ந்து பாடி**
**அறவா! நீ ஆடும் போதுன் அடியின்**
**கீழ் இருக்க என்றார்.**


அற்புதத் திருவந்தாதி, இரட்டை மணிமாலை என்ற இரு நூல்களைப் பாடினார்கள்.

இறைவர் கட்டளைப்படி, திருவாலங் காட்டில் தவஞ்செய்து 'கொங்கை திரங்கி' என்ற மூத்த திருப்பதிகம் பாடிச் சிவானந்தப் பெருவாழ்வு பெற்றார்கள்.

காரைக்கால் – பங்குனி – சுவாதி.

## தண்டியடிகள் நாயனார்

தண்டியடிகள் திருவாரூரில் பிறந்தவர். பிறவியிலேயே கண் பெறாதவர். அறிவுக்கண் பெற்றிருந்தார். இவர் நாள் தோறும் திருவாரூர்ப் பூங்கோயில் சென்று தேவாசிரிய மண்டபத்தைத் தொழுது, திரு ஐந்தெழுத்தை



தண்டியடிகள் நாயனார்

ஓதிக் கொண்டே திருக்கோயிலை வலம் வருவார்.

திருக்கோயிலுக்கு மேற்கே கமலாலயம் என்ற திருக்குளம் உண்டு. அதன் பக்கங்களில் சமணர்கள் பாழிகளைக் கட்டிக் கொண்டு சிறிது சிறிதாகத் திருக்குளத்தைத் தூர்த்துக் கொண்டே வந்தார்கள். அதனால் குளம் அளவில் குறுகியது.

தண்டியடிகள் இதனையறிந்து திருக்குளத் திருப்பணி செய்ய விரும்பினார். குளத்தினுள் ஒரு கோலை ஊன்றினார். குளக்கரையில் ஒரு கோயிலை ஊன்றினார். இரு கோல்களுக்குங் கயிறு கட்டினார். கயிற்றைப் பிடித்துக் கொண்டே சென்று மண்ணை வெட்டிக் கயிற்றைப் பிடித்துக் கொண்டே வந்து கரையில் கொட்டுவார். அவர் உள்ளம் சிவபிரான் திருவடியை நினைந்து உருகும். வாய் திருநாமங்களைக் கூறும். இப்படிப் பல நாட்கள் திருத்தொண்டு செய்து வந்தார்.

சமணர்கள் அது கண்டு பொறுக் கவில்லை. 'நீ இப்படிச் செய்வதனால் மண்ணில் உள்ள உயிர்கள் இறக்கின்றன' என்றார்கள். 'இது சிவத்தொண்டு; பொதுத் தொண்டு' என்றார் தண்டியடிகள். சமணர்கள், 'குருடா, செவிடா' என்று இகழ்ந்தார்கள்.

தண்டியடிகள். 'நீங்கள் கண் இழப்பீர்கள். நான் கண் பெறுவேன்,' என்றார். 'அப்படி நடந்தால் நாங்கள் இந்த ஊரை விட்டு அகலுவோம்,' என்றார்கள். கயிற்றையும் கோலையும் அகற்றி அவரை இடர்ப்படுத்தினார்கள்.

தண்டியடிகள் அழுது இறைவனைத் தொழுது துஞ்சினார். இறைவன் கனவில்

தோன்றி அருள் புரிந்தார். அரசன் கனவிலும் தோன்றி தண்டியடிகள் கருத்தை முற்றுவிக்குமாறு பணித்தருளினார்.

அரசன் மறுநாள் காலை தண்டியடிகள் பால் வந்து அனைத்தையும் விசாரித்து அறிந்தான். சமணர்களை அழைத்தான்.

தண்டியடிகள் கமலாலயத்தில் மூழ்கி எழுந்து கண் பெற்றார். சமணர்கள் கண் இழந்தார்கள். அரசன் ஆணைப்படி அவர்களை ஏவலர்கள் துரத்தினார்கள். சமணர்கள் குழிகளில் விழுந்தும் கால் இடறியும் ஓடி ஒளிந்தார்கள்.

அரசன் திருக்குளத்தைச் சுற்றியிருந்த சமணபாழிகளை இடித்துக் குளத்தைப் பெரிதாக்கினான். தண்டியடிகள் சிவத் தொண்டு புரிந்து சிவபதஞ் சேர்ந்தார்.

திருவாரூர் பங்குனி –சதயம்.

**கணநாத நாயனார்**

சோழ வள நாட்டில், சீகாழியில் மறையவர் மரபில் பிறந்தவர் கணநாதர். சிவபெருமானுக்குச் செம்மையான திருத்தொண்டு புரிந்து வந்தார்.

நந்தவனப் பணி செய்யவும், நறு மலர் எடுக்கவும், பல வகை மாலைகள் தொடுக்கவும், திருமஞ்சன நீர் கொண்டு வரவும், திருவலகிடவும் திருமெழுக்கிடவும், திருமுறைகள் எழுதவும், ஓதவும், விரும்பி வரும் அடியார்கட்குப் பயிற்சி அளித்தார்.



கணநாத நாயனார்


திருஞானசம்பந்தரைக் கண் கண்ட கடவுளாகக் கருதி அவரைப் பூசித்தார். இத்தவப் பயனால் கயிலை சேர்ந்து கணங்கட்கு நாதராக விளங்கினார்.

காழி – பங்குனி – திருவாதிரை.

**முனையடுவார் நாயனார்**

சோழ நாட்டில், திருநீடூரில் வேளாளர் குலத்தில் தோன்றினார் முனையடுவார். இவர் போர் வன்மை மிக்கவர்.

இவர் அரசர்கள் வேண்டும்போது படைத் துணையாகச் செல்லுவார். பகைவரை வெல்லுவார்.



முனையடுவார் நாயனார்

அதன் மூலம் வரும் செம்பொன்னைக் கொணர்ந்து சிவனடியார்க்கு உயர்ந்த அமுதளித்து வழிபாடுவார். இவ்வாறு பல காலம் பண்புடன் பணிபுரிந்து பணியணித்தார். பதமலர் சேர்ந்தார்.

நீடூர் – பங்குனி –பூசம்.

**நேச நாயனார்**

காம்பீலி தேயத்தில் சாலியர் திருக்குலத்தில் பிறந்தவர் நேசர். இவர் அடியார் பக்தியில் தலை சிறந்தவர்.

ஆங்கவர் மனத்தின் செய்கை
அரனடிப் போதுக்காக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை
உயர்ந்த அஞ் செழுத்துக்காக்கித்
தாங்குகைத் தொழிலின் செய்கை
தம்பிரான் அடியார்க்காகப்
பாங்குடை உடையுங்கீளும்
பழுதில்கோ வணமும் நெய்வார்.

நெய்து அடியார்கட்கு அன்புடன் வழங்குவார். இவ்வாறு அடியார்க்குக் கோவணமும் கீளும் உடையுந்தந்து நெடுநாள் வாழ்ந்து நிமலன் திருவடி சேர்ந்தார்.

காம்பீலி – பங்குனி – ரோகிணி.



நேச நாயனார்

# பிரதோஷம்


சிவபெருமானிடம் பேரன்பு பூண்டவர் துருவாச முனிவர். ஒரு நாள் விதிப்படி சிவ பெருமானை வழிபட்டு அருச்சித்த பூவொன்றைக் கையில் ஏந்தி வந்தார். எதிரே தேவேந்திரன் ஐராவதத்தின் மேல் ஏறி வந்தான். முனிவர் கையில் உள்ள மலரை இந்திரனுக்குக் கொடுக்க நினைத்துப் பூவை நீட்டினார். யானை மேல் இருந்தபடியே அங்குசத்தினால் அப்பூவை வாங்கி யானையின் மத்தகத்தின் மேல் வைத்தான். வெள்ளை யானை அந்த மலரை எடுத்துக் கீழே போட்டுக் காலால் மிதித்தது. துருவாசர் அதைக் கண்டு கடுஞ்சினம் கொண்டார். 'சிவபெருமான் திருவடிகளில் அருச்சித்த நிர்மாலியத்தை உனக்குக் கொடுத்தேன். அதை நீ அலட்சியமாக அங்குசத்தால் வாங்கி யானையின் மத்தகத்தின் மேல் வைத்தாய். மதங்கொண்ட உன் யானையும் அதைக் கீழே தள்ளி மிதித்தது. சிவபெருமான் நிர்மாலியத்தை எளிதாக எண்ணியது உன் செல்வச் செருக்கினாலன்றோ? ஆதலால் காமதேனு, கற்பக மரம், சிந்தாமணி முதலிய எல்லாச் செல்வங்களும் உன்னை விட்டு அகலக் கடவதாக" என்று சாபமிட்டார். அவை எல்லாம் இந்திரனை விட்டு நீங்கித் திருப்பாற் கடலைச் சேர்ந்தன. இந்திரனும், தேவர்களும் பொலிவிழந்து வருந்தினார்கள்; வலிமையையும் இழந்தார்கள். அதை அறிந்த அசுரர்கள், தேவர்களுடன் போர் புரிய வந்தார்கள். சண்டை செய்ய முடியாமல் தேவர்கள் பிரம தேவனுடன் சென்று திருமாலிடம் முறையிட்டார்கள். பரந்தாமனும் "பாற்கடலைக் கடைந்து அமுதத்தை எடுத்து உண்டால் வெற்றி பெறுவீர்கள்' என்றார்.



தேவர்கள் அவுணர்களின் துணை கொண்டு மந்தரமலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்தனர். சிவபெருமானை நினைத்தார்களில்லை. வாசுகி நஞ்சை உமிழ்ந்தது. அதன் கொடிய வேகத்திற்கு அஞ்சி ஓடி, திருக்கயிலாயம் சென்று நந்தி தேவரிடம் தெரிவித்தார்கள். அவரும் சிவபெருமானிடம் விண்ணப் பித்தார். சிவபெருமான் தஞ்சமென்று வந்த தேவர்களை அஞ்ச வேண்டாம் என்று சொல்லி, அணுக்கத் தொண்டரான சுந்தரரை அந்த நஞ்சை எடுத்துவரப் பணித்தார். அவரும் அப்படியே செய்தார். பெருங்கருணைத் தடங்கடலான பெருமான் அந்த கொடிய நஞ்சை உண்டு தேவர்களின் துயரத்தை நீக்கினார்; உலக மக்களின் துன்பத்தையும் போக்கினார். அதனாலேயே சிவபெருமானுக்கு நீலகண்டன் என்ற பெயரும் உண்டாயிற்று.

நஞ்சு உண்ட பின் எம்பெருமான் மௌனமாக வீற்றிருந்தார். எல்லோரும், உண வருந்தாது நஞ்சுண்டகண்டனை வழிபட்டனர். அந்த நாளே ஏகாதசியாம். மறுநாள் தேவர்கள் பூஜையை முடித்து உணவருந்தினர். அந்த நாள் துவாதசியாகும். அதற்கடுத்த நாள் மாலைப் பொழுது போவதற்கு முன் மூன்றே முக்கால் நாழிகைக்குள் திரியோதசியோடு கூடிய நாளிலே, துயருழந்தோர் இன்பம் அடையும் பொருட்டு உமாதேவியார் காண ஒரு சாமநேரம் (ஏழரை நாழிகை) சிவ பெருமான் திருநிருத்தம் செய்தருளினார். அந்தக் காலமே பிரதோஷ காலமெனச் சிவாகமங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

பிரதோஷம் மாதந்தோறும் சுக்கில பட்சம், கிருஷ்ணபட்சம் இரண்டிலும் வருகிறது. பிரதோஷத்தில் சனிக்கிழமையும் சேர்ந்து வந்தால் சிறப்பாகக் கருதப்படுகிறது. விரதம் அனுஷ்டிப்போர் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் சனிக்கிழமையுடன் கூடிய பிரதோஷத்தில் இருந்து நோற்க ஆரம்பிப்பது நல்லது. சிவாலயங்களில் அன்று சிவலிங்கமூர்த்திக்கும், நந்தியெம் பெருமானுக்கும் ஒரே காலத்தில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பிரதோஷ நாயகர் இடப வாகனத்தில் எழுந்தருளுவர். அக்காலத்தில் சிவன் கோயிலில் சென்று இறைவனை வழிபடுவோர்கள் எல்லா நலன்களையும் அடைவார்கள்.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரிலும், மொரிசியஸ் நாட்டு மேதகு துணை குடியரசுத் தலைவர் அழைப்பின் பேரிலும், மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு. க. முத்துசாமி இ.ஆ.ப.அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ப.ரா.சம்பத் இ.ஆ.ப. அவர்கள் ஆகியோர் அரசு முறைப்பயணமாக மொரிசியஸ் நாட்டிற்கு சென்று வந்தனர். தமிழக திருக்கோயில்களின் நிர்வாகம், செயல்பாடுகள், திருப்பணிகள் ஆகியவை குறித்து அந்நாட்டினருக்குத் தெரிவித்ததோடு அந் நாட்டில் தமிழ் பாரம்பரியம், கலாச்சாரம், திருக்கோயில்களின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் ஆலோசனைகள் மற்றும் உதவிகள் குறித்து அவர்களால் விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பார்வைக்குக் கொண்டு சென்றனர்.



சென்னை மாவட்டத்தில் அமைந்துள்ள திருக்கோயில்களில் பாடல் பெற்ற கோயில்களுள் நான்கு 1.திருவொற்றியூர், 2.திருமயிலாப்பூர், 3.திருவான்மியூர், 4.திருவல்லிக்கேணி ஆகியவை. இவை நான்கினுள் முதல் மூன்றும் தேவாரம் பெற்றன. திருவல்லிக்கேணி நாலாயிர திவ்வியப் பிரபந்த பாடல் பெற்ற புகழையுடையது.

இவற்றில், சென்னையின் வடபகுதியில் வடசென்னையில் அமைந்துள்ளது திருவொற்றியூர். இத்தலம் தேவார மூவர்களான 1.திருஞானசம்பந்தர், 2.திருநாவுக்கரசர், 3.சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர்களால் பாடல் பெற்ற சிறப்புடையது. திருஞானசம்பந்தர் 11 பாடல்களும், திருநாவுக்கரசர் 44 பாடல்களும், சுந்தரமூர்த்தி நாயனார் 20 பாடல்களும் ஆக மொத்தம் 75 பாடல்கள் திருவொற்றியூர் தியாகராசரைப் பற்றி பாடல் பெற்றுள்ளன.

உலகிலுள்ள மிகப் பழமையான ஊர்களில் முதன்மையானதென பெயர் பெற்றது திருவொற்றியூர். இதனால் இவ்வூர் 'ஆதிபுரி' எனவும் அழைக்கப்பெறும். இவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானும் 'ஆதிபுரீசுவரர்' என குறிப்பிடப் படுகிறார். 63 நாயன்மார்களில் ஒருவரான கலியநாயனார் இத்தலத்திலே தான் அவதரித்தார். சேக்கிழாரால் பாடல் பெற்ற பெரியபுராணத்தில் இடம் பெறும் கலியநாயனார் புராணத்தின் முதல் ஐந்து பாடல்கள் இத்தலத்தின் பெருமையை கூறுகின்றன.

**சிவ– பார்வதி திருமணம்**

கைலாய மலையில், சிவபெருமான் – பார்வதி தேவியின் திருமணம் நடைபெற்றபோது, அத்திருமணக் காட்சியைக் காண அனைவரும் கைலாயம் நோக்கிச் சென்றனர். இதனால் நாட்டின் வடபகுதி பாரம் தாங்காமல் கீழே அமிழ்ந்து, தென்பகுதி பூமி மேலே உயர்ந்தது. இதனைக் கண்ணுற்ற சிவபெருமான் இரண்டு பகுதிகளையும் சமன் செய்யும் பொருட்டு, அகத்தியரை தெற்கு நோக்கிச் செல்லுமாறும், அங்கிருந்தே தம் திருமணக் காட்சியை காணுமாறும் பணிக்கிறார். சிவனின் வேண்டுகோளை சிரமேற்கொண்ட அகத்தியரும், கைலாய மலையை விட்டு




# திருவொற்றியூர் திருத்தலப்பெருமை

பொதிகை மலையை நோக்கிப் புறப்பட்டார். பொதிகை மலையை அடையும் முன்னர் வழியிலேயே இத்தலத்தில் சிவபெருமான் பார்வதி தேவியின் மணக்கோலத்தை கண்டு களித்தார். இக்காட்சி இத்திருக்கோயிலில் நடைபெறும் திருவிழாவில் ஒன்பதாம் நாளன்று கொண்டாடப்படுகிறது.

**எந்நாட்டவர்க்கும் இறைவன்**

மாணிக்கவாசகர் பாடியருளிய திருவாசகம் – சிவபுராணத்தில்

"தென்னாடுடைய சிவனே போற்றி

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று சிவபெருமான், தென்னாட்டைச் சேர்ந்த கடவுளாயினும், யாவரும், எந்த நாட்டைச் சேர்ந்தவரும் இறைவனாக வணங்கக்கூடிய பெருமை பெற்றவர் என்பதை விளக்குகிறார். மிகப் பழங்காலத்தில் வடநாட்டில் உள்ள அயோத்தியை 'மாந்தாதா' என்ற பேரரசன் ஆண்டு வந்தான். அவன் நாடெங்கும் உள்ள கோயில்களுக்கு வேண்டிய பூசைப் பொருட்கள், நைவேத்தியப் பொருட்கள் (படித்தரம்) போன்றவற்றை வழங்கி வந்தான். ஒருமுறை மழை பொழியாமல் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது அதுவரை வழங்கி வந்த படித்தரப் பொருட்களின் அளவை குறைத்து அனுப்புவதாக ஆணையிட்டு, அச்செய்தியினை அனைத்துக் கோயில்களுக்கும் அனுப்பினான். அந்த ஆணை திருவொற்றியூருக்கும் வந்தது. அதில், 'திருவொற்றியூர் நீங்கலாக' என எழுதப்பட்டிருந்தது. இச்செய்தி அயோத்தி அரசனுக்கு தெரியவந்தது. இதனைக் கேள்வியுற்ற அவ் அரசன், திருவொற்றியூருக்கு நேரடியாக வந்து அவன் அனுப்பிய ஆணையில் இடையில் எழுதப்பட்டிருந்த 'திருவொற்றியூர் நீங்கலாக' என்ற வரியைக் கண்டு அதிசயத்து நின்றான். பின்னர் திருவொற்றியூரில் உறைந்துள்ள சிவபெருமானே இதனை எழுதியுள்ளார் என அறிந்து, இறைவனின் திருவருளைக் கண்டு வியந்து, வணங்கி பேறு பெற்றான். இக் காரணத்தால் இத்தலத்து இறைவன் 'எழுத்தறியும் பெருமான்' என்றும் குறிப்பிடப்படுகிறார்.

**வாசுகியை மன்னித்தருளல்**

பாற்கடலைக் கடைந்து, அதிலிருந்து 'அமுதம்' எடுக்க முப்பத்து முக்கோடி தேவர்களும் முற்பட்டனர். இதற்காக மந்தர மலையை மத்தாகவும், 'வாசுகி' என்ற பாம்பை நாணாகவும் (கயிறு) கொண்டு கடைந்தனர். அமுதம் திரண்டு வரும் முன்னர், கடலில் உள்ள நஞ்செல்லாம் ஒன்று திரண்டு வந்தது. அது, நஞ்சென்று தெரியாமல் தேவர்கள் அருந்திவிட்டால், அவர்களுக்கு தீங்கு நேரும் எனக் கருதி, தேவர்களைக் காக்கும் பொருட்டு அந்நஞ்சினை சிவபெருமான் அருந்தினார். இதனை அறிந்த பார்வதிதேவி, நஞ்சு சிவபெருமானின் வயிற்றினுள் செல்லா வண்ணம் தடுக்க, அவரது கழுத்தில் கை வைத்து தடுத்து நிறுத்துகிறார். அந்நஞ்சு சிவபெருமான் கழுத்திலேயே நின்ற, நச்சுத்தன்மையினால் அப்பகுதி நீல நிறமாக மாறுகிறது. நீலமாக மாறிய கண்டத்தை (தொண்டை) உடையவராதலால் 'நீலகண்டன்' என்ற பெயரும் சிவபெருமானுக்கு வழங்கி வருகிறது. சிவபெருமான் நஞ்சினை உண்ணுவதற்கு தானும் ஒரு காரணமாக அமைந்து விட்டோம் என வருந்திய 'வாசுகி பாம்பு' திருவொற்றியூர் பெருமானிடம், தன்னை மன்னித்தருள வேண்டியது. வாசுகி பாம்பின் வேண்டுதலை நிறைவேற்ற அதை மன்னித்து, மன்னித்ததற்கு அடையாளமாக அதனைத் தன் திருமேனியிலே (திருவுருவத்தில்) ஏற்றுக் கொண்டார். இன்றும், ஆதிபுரீசுவரராகிய தியாகராஜ சுவாமிகளின் திருமேனியில் பாம்பின் அடையாளம் உள்ளதை காணலாம். வாசுகி பாம்பின் உருவத்தை மேனியில் ஏற்றதால் 'படம்பக்கநாதன்' என்ற திருப்பெயரும் இறைவனுக்கு வழங்கப் பெறுகிறது. இவ்வரலாற்றினை திருநாவுக்கரசர் தாம் பாடிய திருக்குறுந்தொகையில்,

**'ஒற்றி யூரும் ஒளி மதி பாம்பினை**
**ஒற்றி ஊரும் அப் பாம்பும்அதனையே**
**ஒற்றி யூர ஓர் சடை வைத்தவன்**
**ஒற்றியூர் தொழ நம்வினை ஓயுமே'** என்றும்,

சுந்தரர் தேவாரத்தில்,

**'ஒற்றியூரும் அரவும் பிறையும்**
**பற்றி யூரும் பவளச் சடையான்'** என்றும் பாடியுள்ளனர். **சுந்தரமூர்த்தி நாயனார்**



'தென் கயிலை' எனப் பெயர் பெற்ற திருக்காளத்தியில் காளத்திநாதனை தரிசித்து வணங்கிய பின்னர், திருவொற்றியூர் வந்தடைந்தார் சுந்தரமூர்த்தி நாயனார். இத்தலத்தில் உறையும் சிவபெருமான் மீது பற்று கொண்டு,

'பாட்டுப் பாடி பரவி திரிவார்' எனத் தொடங்கி பதிகம் பாடினார். பின்னர் சங்கிலியாரை மணம் புரிந்தார். சங்கிலியாருடன் ஆரூர் செல்ல முற்பட்டபோது, கண் பார்வை இழந்து தவித்தார். தன் நிலைக்கு தானே வருந்தி 'அழுக்கு மெய் கொடு உன் திருவடி அடைந்தேன்' எனத் தொடங்கி மற்றொரு பதிகமும் பாடினார். இப்பதிகத்தில் அமைந்துள்ள ஒன்பதாவது பாடல், கண் பார்வை இழந்த ஒருவர் படும் துன்பத்தை உள்ளது உள்ளவாறு தெற்றென விளக்குவதாக அமைந்துள்ளது. அப்பாடல்,

**'மகத்திற் புக்கதோர் சனியெனக்**
**கானாய்**
**மைந்த னேமணி யேமண வாளா**
**அகத்திற் பெண்டுகள் நானொன்று**
**சொன்னால்**
**அழையேற் போகுரு டானத்**
**தரியேன்**
**முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம்**
**வாழ்வேன்**
**முக்கணா முறை யோமறை யோதீ**
**உனக்குந் தண்கடல் ஓதம்வந் துலவும்**
**ஒற்றி யூரெனும் ஊருறை வானே'**

என்பதாகும்.

**திருஞானசம்பந்தர்**

திருக்காளத்தியில், காளத்திநாதனை வழிபட்ட பின்னர் திருவொற்றியூர் பெருமானை தரிசிக்க புறப்பட்ட திருஞான சம்பந்தர், வழியில் திருவேற்காடு, திருவலி தாயம் (பாடி) போன்ற திருத்தலங்களில் அமைந்துள்ள இறைவனை வணங்கி இன்புற்றார். திருவொற்றியூரை அடைந்து தியாகராஜ சுவாமிகளைக் கண்டு,

**'விடையவன் விண்ணு மண்ணுந் தொழ**
**நின்றவன் வெண் மழுவாட்**
**படையவன் பாய்புலித்தோ லுடை**
**கோவணம் பல் கரந்தை**
**சடையவன் சாமவேதன் சசி தங்கிய**
**சங்கவெண்தோ**
**டுடையவன் ஊனமில்லி யுறை யும்மிட**
**மொற்றியூரே'**

எனத் தொடங்கி பதிகம் பாடினார்.

இவர் பாடிய பதிகத்தில் 11 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் முதல் பத்து பாடல்களின் இறுதி வரியில் இறைவனைப் பலவாறாக குறிப்பிட்டு பாடியுள்ளபோதும் அவன் (இறைவன்) 'உறையும் இடம் ஒற்றியூரே' என்று முடியும்படி அமைத்துள்ளார்.

**ஐயடிகள் காடவர்கோன்**

காஞ்சி மாநகரினை ஆட்சி செய்த மன்னர்களில் ஒப்பற்றவர் 'காடவர் கோன்' என்ற அரசன்.

இவன் அரசாட்சி புரிந்தாலும், இறைவனின் திருவடிகளே நிலையானது; செல்வம் நிலையற்றது என எண்ணி, இறைவன் திருவடியே தஞ்சம் என வாழ்ந்தார். இதனால் அவர்., 'ஐயடிகள் காடவர் கோன்' (ஐ–கடவுள்; ஐஅடிகள் – கடவுளுடைய திருவடிகள்) எனப் புகழப் பெற்றார். அரசாட்சியை துறந்து, பல சிவத் தலங்களுக்கும் சென்று இறைவனைப் பாடி பரவினார். பல ஊர்களுக்கும் (ஷேத்திரம்) சென்று பாடினமையால், இவரது பாடல்கள், 'சேத்திர வெண்பா' என்ற பெயருடன் பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள் ளன. இவர், திருவொற்றியூருக்கு வந்து பெருமானை கண்டு வணங்கிய பின்னர்,

**"தஞ்சாக மூவுலகும் ஆண்டு**
**தலையளித்திட்டு**
**எஞ்சாமை பெற்றிடினும் யான்**
**வேண்டேன்– நஞ்சம்**
**கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி**
**இரந்துண் டிருக்கப் பெறின்."**

என்று பாடியுள்ளார். 'மூவுலகும் அரசாளும் பெருமையைக் காட்டினும் பெரியது, திருவொற்றியூரில் பிச்சை எடுத்து உண்டு பெருமானைக் கும்பிட்டிருப்பது'' என்பது காடவர் கோன் தம் வாழ்வில் கண்ட உண்மையாகும்.

''பட்டினத்தார்'' என்றழைக்கப்படும் பட்டினத்துப் பிள்ளை என்பவரும் திருவொற்றியூர் திருத்தலத்தின் பெருமை பற்றி, 'திருவொற்றியூர் ஒருபா ஒருபது" என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

இத்தகு சிறப்புமிக்க திருவொற்றியூர் தியாகராஜ சுவாமியை நாமும் வணங்கி, வாழ்வில் வளம் பெறுவோம்.

**–முனைவர்: இர.தர்மாம்பாள்**
**எம்.ஏ., எம்.ஃபில், பிஹெச்.டி.,**

# உலகம் உய்ய உதித்த உடையவர்

–சென்ற இதழ் தொடர்ச்சி



இராமானுஜரை பிரிந்த மாசில்லாத பெருமையுடைய பெரியநம்பியும், கூரத்தாழ்வாரும், தாயைப் பிரிந்த கன்றைப் போல தவித்தனர். சோழ மன்னனின் படை வீரர்கள், பெரிய நம்பியையும், கூரத்தாழ்வாரையும் அரசன் முன்னிலையில் நிறுத்தினார்கள். அரசன் அவர்களைப் பார்த்து உடையவர் எங்கே எனக் கேட்டான். அதற்கு அவர்கள் அவர் எங்கோ ஒளிந்து விட்டார். எங்களுக்கு தெரியாது என்று கூறினார்கள். கூரத்தாழ்வாரின் சீடரான நாலூரான் என்பவன் வஞ்சக எண்ணம் கொண்டு வந்திருக்கும் இவர்களில் ஒருவர் உடையவரின் ஆச்சாரியாரான பெரிய நம்பி என்றும், மற்றொருவர் உடையவரின் சீடரான கூரத்தாழ்வார் என்றும் அரசனுக்கு தெரிவித்தான். அரசன் மிகவும் கோபம் கொண்டான். மேலும், அரசன் ஒரு ஓலையை அவரது கையில் கொடுத்து, இதில் கையெழுத்து இடுங்கள் என்று கட்டாயப்படுத்தினான். பெரிய நம்பியும், கூரத்தாழ்வாரும், அவ்வோலையில் என்ன எழுதி இருக்கிறது என்று வினவினார்கள். அதற்கு அம்மன்னன் சைவ ஆகமம் தான் உயர்ந்த நீதி நூல் என்றும், திருமாலும், பிரம்மனும் அறிய முடியாத பரம்பொருள் சிவன் என்றும் எழுதப்பட்டுள்ளது என்றான்.

ஓலையே(து) எழுத்தே(து) என்றார்
உடையவர்க் கினிய அன்பர்
வேலை சூழ் பூமி வேந்தன் விளங்குசை
வாக மந்தான்
மாலயன் அறியா நீதி வண்பரம்
சிவமான் என்னக்
கோலிய ஓலை என்றான் கோதிலா
இருவர் மன்னா

–ஸ்ரீராமனுஜ வைபம் பாடல்–854.

அதற்கு அவர்கள் இருவரும் இந்த ஓலையில் நாங்கள் ஏன் கையெழுத்து இட வேண்டும் எனக் கேட்டார்கள். நீங்கள் கையெழுத்து இடாவிட்டால் இவ்வோலை பயன் அற்றதாகிவிடும். எனவே, கையெழுத்து இடுங்கள் என்றான். அதற்கு கூரத்தாழ்வார் அரசனிடத்தில் சிவம் தான் பரம்பொருள் என்று நீயே சொல்லிக் கொண்டு எங்களை கையெழுத்து இடு என்கிறாய். சிவம் பரம் பொருள் ஆனால், பிரம்மாவின் தலையைக் கிள்ளிய துன்பத்தைப் போக்குவது சிவனுக்கு பொறுப்பல்லவா என்றும், சிவன் பரம்பொருள் என்றால் பெருமாள் இடத்தில் பிச்சை எடுக்கலாமா என்றும் கேட்டு, மேலும்

பெ.ராமநாதபிள்ளை, செயல் அலுவலர்,
அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை,

பிரளய காலத்தில் உலகத்தை உண்ட அன்றைக்கும், உமிழ்ந்த அன்றைக்கும், வராக அவதாரம் எடுத்து உலகையெல்லாம் தன் கொம்பினால் நிமிர்த்திய அந்த நாளிலும் மூவுலகை ஈரடியால் அளந்த அந்த நாளிலும், உன்னைப் போன்ற சைவ சமயிகள் இருந் திருப்பார்களேயானால், அவர்களும் திருமாலே பரம்பொருள் என்று உணர்ந் திருப்பார்கள். வேந்தனே, ஐம்பூதங்கள் அழிந்தாலும், அழியாத திருமாலின் நிலையை வேதங்கள் அறியும், சிவனும் அறிவார், பிரம்மாவும் அறிவார். 14 உலகங்களும் அறியும். எனவே, தாங்கள் இந்திரியங்களின் வழியே அறிவை செலுத்தி, மயங்கி நிற்பது எரிகின்ற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போலாகும் என்றார்.

அறியா தொன்றை ஓரொருவர்
அறிவிற் காட்டிச் செயப்புக்கால்
நெறியால் நின்ற குரவர்கடன் அதனைத்
தவிர்த்து நிலைநிறுத்தல்
பொறிவாய்ப் புலனால் ஆங்கவரும்
போத மயங்கிப் பூபதியே
எறியா நின்ற கனலிடை நெய் ஈவார்
ஒத்தார் என்னாமல்
–ஸ்ரீராமனுஜ வைபம் பாடல்–863.

கூரத்தாழ்வார் இவ்வாறு சொல்லவும், இதனைக் கேட்ட அரசன் மிகவும் கோபம் கொண்டு நீர் இனிமேல் எதுவும் பேச வேண்டாம். சிவத்திற்கு மேம்பட்டு ஒன்றும் இல்லை என்று கையெழுத்து இட வேண்டும் என மிகவும் கட்டாயப்படுத்தினான். அதை வாங்கிப் பார்த்த கூரத்தாழ்வார் சிவம் என்றால் வடமொழியில் "குருணி" என்று அர்த்தம் உண்டு. (குருணிக்கு மேல் உள்ள அளவு பதக்கு என்பதாகும்) குருணி, பதக்கு என்பது அளவு முறைகள். குருணிக்கு மேல் பதக்கு என்னும் அளவு உண்டு என்பதை அறிந்து கொண்டு சிவத்திற்கு மேல் பரம்பொருள் உண்டு என்று நிலைநாட்ட குருணிக்கு மேல் பதக்கு உண்டு என்று எழுதி குருணி என்பது சிவம், குருணிக்கு மேல் பதக்கு இருப்பதால் சிவத்திற்கு மேல் பரம் பொருள் உண்டு எழுதி கையெழுத்து இட்டார்.

கூரத்தாழ்வான் அதுகேட்டுக் குருணி
யென்றும் சிவமென்றும்
நேரொப் பிடுமோர் சொல்லுளதாம்
அதனை நிலையாயப் பிடித்தெடுத்தாங்
(கு)
ஓரப்பட்ட குருணிக்கு மேலே பதக்கும்
உண்டென்னத்
தீரத் தெளிந்து திருவெழுத்தை இட்டுக்
கொடுத்தான் சீக்கிரத்தில்
– ஸ்ரீராமனுஜ வைபம் பாடல்–865.

அரசன் அவ்வோலையை வாங்கிப் படித்து கடும் கோபம் கொண்டான். கட்டுக் கடங்காத கோபத்துடன் என்ன செய்துள்ளாய். உன் கண்கள் இரண்டையும் இன்றே பிடுங்கி விடுவேன் என்று கர்ஜித்தான். உடனே கூரத்தாழ்வார் அரசனை நோக்கி கீழ் மகனே! உன்னைப் பார்த்த என் கண்கள் இனிமேல் இருக்கலாமா? நீ என்ன என் கண்ணைப் பிடுங்குவது, நானே என் கண்களை பிடுங்கிக் கொள்வேன் என்று தனக்குத் தானே நிகரான கூரத்தாழ்வார் தம் கண்களில் கற்பூரத்தை வைத்துக் கொழுத்தி, தன் கண்களை தானே அழித்துக் கொண்டார்.

இச்செயலைக் கண்ட பெரியநம்பிகள் மிகவும் நடுநடுங்கி எல்லையில்லா துன்பத்தை அடைந்து பெருமாளை நோக்கி, அந்தோ இக்காட்சியை காண்பதற்கா பூமியில் என்னை உயிரோடு வைத்தாய் என்று புலம்பி குருநாதர் ஆளவந்தாரை தன் இதயத்தில் தியானித்தார். வயோதிகம் காரணமாக பெரியநம்பி திருவரங்கம் வரும் வழியிலேயே கூரத்தாழ்வாரின் தலையில் திருமுடியும், தன் மகள் அத்துழாய் மடியில் திருவடியையும் வைத்து, ஆளவந்தாரின் திருவடிகளை தியானித்துக் கொண்டு, தன்னுடைய 105–வது வயதில் இப்பூமியில் தன் திருமேனியை விட்டு விட்டு, பரமபதம் என்ற திருநாடு அலங்கரித்தார்.

சோழ மன்னன் பெருமாள் மீது மிகவும் கோபம் கொண்டு சிதம்பரம் சென்று அக்கோயிலில் உள்ள சித்திரக் கூடத்தை இடித்து பெருமாளை கடலிலே தூக்கி எறிந்தார். அந்த அளவிற்கு அக்காலத்தில் சைவ, வைஷ்ணவ வெறுப்பு இருந்தது, என்பது இச்செயலில் இருந்து தெரிய வருகிறது.

சென்றனன் தில்லைச் சித்தர கூடம்

செறிந்தனன் செறிவதன் முன்னே
அன்றதில் திருக்கண் வளர்ந்தருள்
மாயன் அனந்தனே முதலவரோடும்
ஒன்றுமாங் கின்றி மறைந்தனன்
மறைந்தாங்(கு)
என்றுநின் றேத்தும் திருப்பதி தனிலே
எழுந்தனன் யாவரும் இறைஞ்ச.
– ஸ்ரீராமானுஜ வைபம் பாடல்–869.

பெரிய நம்பி மறைந்ததும், அதனைக் கேள்விப்பட்ட ஸ்ரீரங்கத்துப் பெரியவர்கள், கூரத்தாழ்வாரை ஸ்ரீரங்கத்திற்கு அழைத்து வந்தனர். பெரிய நம்பியையும், வேத வாக்கியத்தில் விதித்தபடி, அவரை (பெரிய நம்பியை) திருப்பள்ளிபடுத்தினர். ஸ்ரீரங்கம் திருக்கோயிலுக்கு வந்த கூரத்தாழ்வாரை, பெருமாள் மனமிரங்கி கருணையுடன் அவரை நோக்கி, "குற்றமற்ற கூரத்தாழ்வானே உமக்கு இப்படிப்பட்ட தீமை நடந்தது நீ முந்தையப் பிறவி காலத்தில் செய்த பாவத்தின் காரணமாகும். தேவரும் நடுங்கும் வகையிலே உமக்கு இத்துன்பம் அரசனால் ஏற்படக் காரணமாக இருந்த நாலூரானை நாம் அடியோடு வெறுத்தோம். அவருடைய நரக அனுபவம் நாம் உயிர் உள்ளவரை இருக்கும் என்று சொல்லி மேலும் இத்தருணத்தில் நீ எதையெல்லாம் கேட்கிறாயோ, அதையெல்லாம் தருவேன் என்று பெருமாள் கூரத்தாழ்வாரிடம் கூறினார். உடனே, கூரத்தாழ்வார் பெருமானை நோக்கி பெருமாளே அடியேன் வேண்டும் வரம் என்னவென்றால் நாம் பெற்ற பெரும் செல்வமாகிய பரமபதத்தை நாலூரான் பெற வேண்டும் என்றார். இந்த மாமிச மயமான சரீரத்தை பெற்றதினால் கிடைத்த பயன் அடியேனுக்கு நிச்சயமாய் உண்டு. உங்களை நான் பெற்றுள்ளேனே. இதை விட வேறு பாக்கியம் உண்டோ என்றார்.

தேன்பெற்ற துழாயலங்கல் திருமாலே
வேண்டுவது
நான் பெற்ற பெருஞ்செல்வம்
நாலூரான் பெறும்வரமிவ்
ஊன்பெற்றுக் கிடைத்த பலம்
அடியேனுக் குறுதிநின்னைத்
தான் பெற்றேன் இனிப்பேறு
வேறுண்டோ தனிமுதலே.
ஸ்ரீராமானுஜ வைபம் பாடல்–874.

உடனே பெருமாள் ஆழ்வாரை நோக்கி நல்ல தவத்தை உடைய கூரத்தாழ்வாரே நீர் கேட்ட வரம் சீதை அனுமாரிடம் கேட்ட வரத்திற்கு சமமாகும் என்று சொல்லி உமக்கும், உன்னோட சம்பந்தமான அனைவரும் பரமபதம் தந்தோம் தந்தோம் என்று வாக்குறுதி அளித்தார்.

<u>சீதை அனுமனிடம் கேட்ட வரமாவது</u>

பத்து மாதம் அசோக வனத்தில் அரக்கிகள் சீதையை பலவாறு துன்புறுத்தினர். அதனை நேரில் கண்டிருந்தவன் அனுமன். பின்னர் இராவண வதம் முடிந்த பிறகு சீதைக்கு இராமனது வெற்றிச் செய்தியைச் சொன்னான். அனுமன் சீதையிடம் உமக்குத் துன்பம் விளைத்த இவ்வரக்கிகளைப் பலவாறு துன்புறுத்த வேண்டும் என்று வரம் கேட்டான். "ஆஞ்சனேயா அரக்கிகளுக்கு எந்த ஒரு தீமையும் விளைவிக்கலாகாது," என்று அனுமனிடமிருந்து அரக்கிகளைக் காத்த சீதையின் செயலைக் குறிப்பிடுகிறார்.

பின்னர் கூரத்தாழ்வார் திருமடத்திற்கு எழுந்தருளி அங்கே வாழ்ந்து வந்தார். ஒருநாள் கண்களை இழந்த கூரத்தாழ்வாரின் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு ஸ்ரீரங்கம் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அப்பொழுது

அரசனுடைய ஆட்கள் இராமானுஜரின் சம்மந்தம் பெற்றவர்கள் கோயிலுக்குள் வரக்கூடாது என்று கூறினார்கள். உடனே, கூரத்தாழ்வார் எனக்கும் இராமானுஜருக்கும் சம்மந்தம் உண்டு. நான் இராமானுஜரின் தாசன் என்று சொல்லிக் கொண்டு கோயிலுக்கு உள்ளே செல்லாமல் கோயில் வாசலில் இருந்து திரும்பி விட்டார். கூரத்தாழ்வாருக்கு இத்தகைய கொடுமையை செய்த சோழ மன்னனை மக்கள் நிந்தித்தார்கள். மகா பாவியான அந்த சோழன் ஒவ்வொரு பெருமாள் கோயிலாக அழித்து வந்தான். ஸ்ரீரங்கம் கோயிலையும், கோயில் மதில்களையும் இடிக்க வந்தபோது தீராத வயிற்று வலியால் துடிதுடித்தான். எந்த கண்டத்திலிருந்து பெருமானை நிந்திக்கும் வார்த்தைகளை வர செய்தானோ அந்த கண்டத்தில் புழுக்கள் நெளிந்து உயிரை விட்டான். மக்கள் அவரை கிருமி கண்டன் என்று அழைத்தார்கள்.

– தொடரும்...

# பங்குனி உத்திரத் திருநாள்

அகல கில்லேனினிறை யுமென்று
அலர்மேல் மங்கை மார்ப
நிகரில் புகழாய் உலகம் மூன்று
உடையாய், என்னையாள்வானே
நிகரிலமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங்கடத்தானே
புகலொன்றுமில்லா அடியேன்
உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தானே!

என்று திருமகளாகிய இலக்குமி பிராட்டி திருமாலை எப்போதும் விட்டு பிரியாதிருக்கும் நிலையில் அவனுடைய திருமார்பில் விளங்கி வருகிறாள்.

இதனால் தானோ திருமலை வாழ் திருவேங்கடவன் எப்போதும் லஷ்மி கடாஷத்துடன் விளங்கி வருவதை பார்த்து வருகிறோம்.

இலக்குமி பிராட்டியானவள் பங்குனி உத்திரத்தில் உதித்த பாவை நல்லாள். பாற்கடலில் இருந்து அவதரித்த உடன் மாலவனையே மணந்த மங்கை. பங்குனி உத்திர நன்னாள் திருமகளின் அவதார நன்னாளாகவும் திருமண நன்னாளாகவும் அமைந்து விட்டது நாம் பெற்ற பாக்கியம்.

வைணவ சமுதாயத்தின் முக்கிய கோட்பாடான சரணாகதியின் பெருமையை காக்கும் நன்னாளாகவும் இதைக் கொண்டாடலாம்.



திருமாலை சரணாகதி அடைவதை விட திருமகளோடமர்ந்த நிலையில் நாம் செய்யும் சரணாகதிக்குப் பலன் அதிகம். காரணம் திருமகள் நமக்குத் தாய். ஒரு சாதாரணத் தாயே தனது குழந்தையிடம் அவனின் குற்றங்களை பற்றி தந்தையிடம் கூறி தந்தையின் கோபத்திற்கு ஆளாகாமல் காப்பாற்றுவாளோ அப்படியே லோகநாயகியானவள் எப்படி நம்மை கை விட்டு விடுவாள்?

திருமகளானவள் பகவானிடத்தில் நம் குற்றங்களை கூறும்போது அது கடுகளவு என்றும் நம் குணங்களைக் கூறும்போது அது மலையளவு என்றும் திருமாலிடம் எடுத்துச் சொல்லி நமக்கு நல்ல கதி கிடைக்க வழி வகுப்பாளாம்.

திருமாலும் திருமகளும் சேர்ந்திருந்த காலத்தில் பலன் அதிகம் என்பதை இராமாயணத்தில் இருந்து ஒரு காட்சி மூலம் அறியலாம்.

இராமனும், சீதையும் வனவாஸத்தில் இருந்தபோது காகாஸுரன் சீதையை மானபங்கப்படுத்தினான். அத்துயரை தாங்கவொண்ணாத இராமன் ஒரு தர்ப்பை புல்லை எடுத்து காகத்தின் மீது ஏவி அதைக் கொல்ல முயற்சித்தான். அதைக் கண்டு ஓடிய காகாஸுரன் சிவன், பிரம்மா இவர்களை சரணடைந்தபோது அவர்கள் காகாஸுரனை மீண்டும் ராமனையே சரணடையச் சொல்லி அனுப்பி விட்டார்கள். கடைசியில் மீண்டும் காகாஸுரன் சீதா ராமன் இருக்குமிடம் வந்து குற்றுயிரும் குலையுருமாக விழுந்தான்.

சீதை காக்கையின் தலைப் பகுதியை இராமனை சரணாகதி அடையும் விதத்தில் திருப்பி வைத்தாராம். இதை ஏற்றுக் கொண்ட ராமன் காகாஸுரனுக்கு உயிர்பிச்சை அளித்தான். பின்னால் சீதையை விட்டு பிரிந்த காலத்தில் இராவணனை எதிர்த்தவர்கள் இராவணன் உள்பட அனைவரும் மாண்டனர்.

இப்படி பங்குனி உத்திர நன்னாளில் அனைத்து திருமால் திருத்தலங்களிலும் திருமாலுக்கும் திருமகளுக்கும் திருக்கல்யாண வைபவத் திருவிழா நடக்கும். பெருமானும் பிராட்டியும் சேர்த்தியில் இருக்கும்போது பகவத் ராமானுஜர் அவர்களை தரிசித்து கத்தியத்திரயம் அருளிச் செய்தார். இதில் பெருமான், பிராட்டி, வைகுண்ட மகிமை பற்றி மூன்று விஷயங்களைப் பற்றி குறிப்பிடுகிறார்.

*29.03.2010* அன்று பங்குனி உத்திர நன்னாள் அமைகிறது. அடியார்கள் அனைவரும் பெருமானையும் பிராட்டியையும் திருக்கோயில்களுக்குச் சென்று சரணாகதி செய்தால் நமக்கும் நல்லது நடக்கும் என்பதில் வியப்பேதுமில்லை.

படைப்பும், படங்களும்:
எம்.என்.ஸ்ரீனிவாசன்.

## அரியவகைத் தாவரம்

சென்னை
திருவல்லிக்கேணி அரசினர்
மகளிர் மகப்பேறு
மருத்துவ மனையில்
அமைந்திருக்கும்
அருள்மிகு நாகேஸ்வரி
அம்மன் திருக்கோயிலில்
உள்ள திருவோட்டுக்காய்
தாவரத்தில் காய்த்திருக்கும்
திருவோட்டுக்காய்.





# சொந்தம்


நமக்குச் சொந்தமல்லாத பொருளை நாம் நமக்குச் சொந்தம் என்று எண்ணியும், இவை நமக்குச் சொந்தம் என்று கூறியும், மதி மயங்கி நிற்கின்றோம்.

இந்த வீடு நம்முடையது என்கின்றோம். இதற்கு முன் எத்தனையோ பேர் அதனை என்னுடையது, என்னுடையது என்று கூறினார்கள். நமக்குப் பின்னர் பலர் அவ்வாறு கூற இருக்கின்றார்கள். இந்த உலகங்கள் யாவும் இறைவனுடையவை. எல்லாவற்றையும் உடையவராதலின் இறைவனுக்கு 'உடையவர்' என்ற பேருண்டு. எல்லாம் அவருடைய உடைமை. ''உடையவனே'' என்கின்றார் மாணிக்கவாசகர்.

நாம் விலை கொடுத்து நம் பேருக்குப் பதிவு செய்துள்ள நம் வீட்டில் வாழும் பல்லி, எலி, பூனை, எட்டுக்கால் பூச்சி முதலியவை, அந்த வீட்டைத் தமக்குச் சொந்தமாகவே எண்ணுகின்றன. அதுபோல் எல்லாம் இறைவனுடைய உடைமையாக இருக்கவும், அவற்றை நம்முடையவை என்று மயங்குகின்றோம். என்னே நமது அறியாமை?

இதனைவிட அறியாமையுடையார் சிலர் உளர். "இந்த வீடு என்னுடையது" என்றார் ஒருவர். "என்ன வாடகை வருகின்றது," என்று கேட்டேன். "விற்று எட்டு ஆண்டுகள் ஆயின," என்றார். விற்று விட்ட நிலத்தையும், வீட்டையுங்கூட என்னுடையவை என்று பிறரிடம் காட்டிப் பெருமை பேசும் பித்தர் சிலர் உள்ளனர்.

இனி இந்த உடம்பும் நமக்குச் சொந்தமன்று. இந்த உடம்பு நமக்கு இறைவன் கொடுத்த ஒரு வாடகை வண்டி. இதில் ஏறி நாம் பிரயாணம் பண்ணுகின்றோம். ஒரு குறிப்பிட்ட காலத்தை



அருண்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

நமக்கு அளவிட்டுக் கொடுத்துள்ளார், அக்கால எல்லைக்குள் நாம் முத்தியுலகை நாடிப் பிரயாணம் புரிய வேண்டும். பெரும்பாலோர் நமன் உலகை நாடியே போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த உடம்பை, நெருப்பு எனக்கென்றும், புழு எனக்கென்றும், மண் எனக்கென்றும், பருந்து எனக்கென்றும், நரி எனக்கென்றும், நாய் எனக்கென்றும் கூறுகின்றன. நாம் நம்முடையது என்று கருதி ஜபம், தவம், தியானம், ஆலய வழிபாடு முதலிய ஒன்றும் புரியாமல், வேளை தவறாமல் விலாப்புடைக்க உண்டு இந்த உடம்பை வளர்க்கின்றோம்.

எரியெனக் கென்னும் புழுவோ
எனக்கெனும் இந்த மண்ணும்
சரியெனக் கென்னும் பருந்தோ
எனக்கெனும் தாள்புசிக்க
நரியெனக் கென்னும் புன்நாய்
எனக்கெனுமிந் நாறுடலைப்
பிரியமுடன் வளர்த்தேன் இதனால்
என்ன பேறெனக்கே.

ஆகவே, இந்த உடம்பு, செல்வம், வான், காற்று, கனல், புனல், மண், கதிர், மதி முதலிய எல்லாம் இறைவனுடைய உடைமைகள். ஸ்வம் –சொத்து; எல்லாவற்றையும் சொந்தமாக உடையவராதலின் ஸ்வாமி, என்ற பெயரால் ஆண்டவரை அழைக்கின்றோம்.

முற்றுந் துறந்த முனிவர் ஒருவர் திருத்தல யாத்திரை புரிந்து வந்தார். பற்றற்ற பரம ஞானியாகிய அவர் இன்றிருந்த ஊரில் நாளை இரார். ஒருவேளையே உப்பில்லாத உணவை உண்பார். அவர் பொய்யை அதிகமாக வெறுப்பவர்.

'மனத்தொடு வாய்மை மொழியின்
தவத்தொடு
தானஞ் செய் வாரில் தலை'

என்ற திருக்குறளை இடையறாது கூறுவார். அவருடைய வாய் மறந்தும் பொய் புகலாது. அன்றியும் பொய் புகல்வார் மனையில் புசியார். இதனை மிகவும் சிறந்த குறிக்கோளாகக் கொண்டு ஒழுகினார்.

ஒரு ஊருக்குப் போனால் அங்கே உண்மை பேசுவோர் யார் எனக் கேட்டறிந்த பின்னர், அவர் வீட்டில் உச்சிப் பொழுதில் ஒரு சிறிது அன்னம் உண்பார்.

ஒருநாள் ஒரு ஊருக்குச் சென்றார். 'இந்த ஊரில் உண்மையாளர் யாவர்? என உசாவினார்'. அதோ தெரிகின்ற மாடி வீட்டில் வாழ்கின்ற முதலியார் உண்மையாளர். அடியார் பக்தியுடையவர். ஒரு லட்சம் செல்வமும், நான்கு புதல்வரும் உடையவர்! என்று பலரும் பகர்ந்தார்கள். பின்னர் முதலியாருடைய வீட்டை முனிவர் அணுகினார்.

ஆசனத்தில் அமர்ந்திருந்த முதலியார் பளீர் என்று எழுந்தார். ஓடி வந்து ஞானியார் அடிமலர் மீது விழுந்தார். அவரை ஆசனத்தில் எழுந்தருளப் புரிந்து "பெருமானே! உணவு செய்ய எழுந்தருள வேண்டும்," என்று வேண்டினர். அவருடைய அன்பு அடக்கம் பணிவு முதலிய நற்குணங்களைக் கண்டு முனிவர் முகமலர்ந்து, உண்மையாளர்தானா என்று சோதித்தறிந்த பின்னரே உணவு செய்ய வேண்டும் என்று கருதினார்.

''ஐயா உமக்குச் செல்வம் எவ்வளவு உண்டு?"

''சுவாமீ! இருபத்து இரண்டாயிரம் ரூபாயுண்டு!"

"குழந்தைகள் எத்தனை பேர்?"

"சுவாமி ஒரே புதல்வன் தான்"

"உமக்கு என்ன வயது?"

"சுவாமி! எனக்கு வயது மூன்று வருஷம் ஐந்து மாதம் ஏழுநாள் பதினாறரை மணி."

முனிவருக்குப் பெருஞ்சினம் மூண்டது. "மூடனே! நீ சுத்த புளுகனாக இருக்கின்றாய். பேசுவதெல்லாம் பெரும் புரட்டு; உன் வீட்டு அன்னம் என் தவத்தையழிக்கும். நான் பொய்யர் வீட்டில் புசியேன்" என்று கூறிச் சீறி எழுந்தார்.

முதலியார் அவர் காலில் விழுந்து, "அருள் நிறைந்த அண்ணலே! அடியேன் ஒருபோதும் பொய் புகலேன்; சத்தியம் சொல்கின்றேன்; சற்று நிதானமாக ஆய்ந்து பார்த்து உண்மையுணர்வீராக" என்று கூறித் தனது வரவு செலவுப் புத்தகத்தைக் காட்டினார். அதில் இருப்புத் தொகை ஒரு லட்ச ரூபாய் என்றிருந்தது.

"அடேய்! இதோ உனக்குச் சொத்து ஒரு லட்சமென்றிருக்கிறதே. நீ இருபத்து இரண்டாயிரந்தான் என்று பொய் சொன்னாயே"! என்று கடிந்தார் முனிவர்.

"சுவாமீ! ஒரு லட்ச ரூபாய் பெட்டியில் உளது. ஆனால், பெட்டியில் உள்ள பணம் எனக்குச் சொந்தமாகுமா? இதோ பாருங்கள். தருமக் கணக்கில் இதுகாறும் இருபத்திரண்டாயிரமே செலவழிந்துள்ளது. தருமம் புரிந்த பணம் தானே என்னுடையது; இப்போது நான் மாண்டால் இந்தப் பெட்டியில் உள்ள பணம் என்னுடன் வராதே? உடன் வருவது தருமம் ஒன்றுதானே. ஆகவே, எனக்குச் சொந்தம் தருமம் புரிந்த இருபத்திரண்டு ஆயிரந்தான்'' என்று கூறினார் முதலியார்.

முனிவர் இதைக் கேட்டு வியப்புற்றார். "ஆமாம் உனக்கு நான்கு புதல்வர்கள் உண்டு என்று கேள்விப்பட்டேனே?"

"சுவாமீ! எனக்குப் பிறந்த பிள்ளைகள் நால்வர்; ஆனால், என் பிள்ளை ஒருவன்தான்."

"அப்பா! நீ சொல்வதின் கருத்து எனக்கு விளங்கவில்லையே!"

"சுவாமீ! விளங்க வைக்கின்றேன்."

(1) "மகனே நடராஜா'' என்றழைத்தார் முதலியார். "சீட்டு விளையாடுகின்றேன். வர முடியாது," என்று பதில் வந்தது.

(2) "மகனே! சிவசாமீ!"

உனக்குப் புத்தியிருக்கின்றதா? உன்னோடு பேச என்னாலாகாது," பூமிக்குச் சுமையாக இன்னும் ஏன் இருக்கின்றாய்?"

(3) "மகனே வேல்சாமீ!"

"ஏன் இப்படிக் கத்துகின்றாய்? வாயை மூடிக் கொண்டிரு."

(4) "மகனே கந்தசாமி!"

கந்தசாமி ஓடிவந்து பிதாவையும் முனிவரையும் தொழுது, "சுவாமி! பால் கொண்டு வரட்டுமா? பழம் கொண்டு வரட்டுமா? என்று கேட்டு உபசரித்து விசிறி எடுத்து வீசிக் கொண்டு பணிவுடன் நின்றான்."

முதலியார்! "சுவாமீ! அந்த மூவர்களும் என் புதல்வர்களா? என் கருத்துக்கு முரணானவர்கள் பிள்ளைகளா? போன பிறப்பிற்பட்ட கடன்காரர்கள். இவன் ஒருவன் தான் என் பிள்ளை," என்றார்.

''அப்பா! உன் கருத்து உவகையைத் தருகின்றது. வயது விஷயத்தில் நீ கூறியதன் உட்பொருள் யாது?"

''சுவாமீ! அடியேன் நாள் ஒன்றுக்கு ஒன்றரை மணி நேரம் தான் வழிபாடு செய்கின்றேன். மிகுதி நேரமெல்லாம் வயிற்றுக்காகவும், குடும்பத்துக்காகவும் உழைக்கின்றேன்.

பேசாத நாளெல்லாம் பிறவா நாள்தான், இறைவனை மறந்த நேரம் இறந்த நேரம். இறைவனை நினைத்துப் பூசிக்கும் நேரம் தான் எனக்குச் சொந்தம். அடியேனுக்கு இந்த உடம்பு பிறந்து அறுபது ஆண்டுகள் ஆயின. ஐந்து வயதிலிருந்து பூசிக்கின்றேன். நாள் ஒன்றுக்கு ஒன்றரை மணி நேரம் பூஜை செய்கின்றேன்.

அந்த வகையாகப் பார்த்தால், 30 ஆயிரத்து 112 மணி நேரம் ஆகின்றது. ஆகவே, அடியேன் பிறந்து அறுபது ஆண்டுகளானாலும் எனக்குச் சொந்த வயது திட்டமாக மூன்று ஆண்டு ஐந்து மாதம் ஏழு நாள் பதினாறரை மணி தான்.

(1) தருமம் செய்த பணம் எனக்குச் சொந்தம்.

(2) என் கருத்தை அனுசரிக்கின்றவனே எனக்குச் சொந்த மகன்.

(3) பூஜை செய்த நேரம் எனக்குச் சொந்தம் என்றார்.

இதைக் கேட்ட முனிவர் பெரிதும் மகிழ்ந்தார். முனிவர், அவர் வீட்டில் உண்டு அவரை வாழ்த்திவிட்டுச் சென்றார்.

# கண்டேன் கமல மலர்ப்பாதம் (கோயில் திருவாய்மொழி)

**சென்ற இதழ் தொடர்ச்சி**



*(9)*

*உளனெனிலுளன்*
*அவனுருவமிவ்வுருவுகள்*
*உளனலனெனில்*
*அவனருவமிவ்வருவுகள்*
*உளனெனவிலனென*
*இவைகுணமுடைமையின்*
*உளனிருதகைமையோடு*
*ஒழிவிலன்பரந்தே*

*உளனோ? அலனோ?*

இறைவன் உளன் என்றால் உள்ளவன் ஆகிறான். அப்போது உருவத்தோடு இருக்கும் பொருள்கள் எல்லாம் அவனுடைய தூல சரீரமாகும். இறைவன் இலன் என்றாலும் உள்ளவன் ஆகிறான். எப்படியெனில்; அப்போது உருவம் இல்லாததாய் இருக்கும் பொருள்கள் எல்லாம் அவனுடைய சூட்சும சரீரமாகும். ஆதலால். உளன் என்றும், இலன் என்றும் கூறப்படும் இவற்றைக் குணமாகக் கொண்டவனும், உருவமும், அருவமும் ஆன தூல, சூட்சுமப் பொருள்களையுடையவனாய் எங்கும் ஒழிவு இல்லாதவனாகிப் (நீங்காதவனாகி) பரந்து இருக்கின்றவனே ஆவான் இறைவன்.

சர்வ சூந்யவாதியை மறுக்கிறார். அதாவது, இறைவன், குணங்கள், மேம்பட்டவன் முதலிய எதுவுமே இல்லை என்ற கொள்கையுடைய வர்களை மறுத்துப் பேசுகிறார்.

எல்லாம் உள்ளவை என்று கூறின் எப்பொருள் தோன்றுமோ, அப்பொருளே எல்லாம் இல்லை என்று கூறினும் தோன்றும். 'இங்கே குடம் இருக்கிறது' எனின் மண்ணின் நிலைமை வேறுபாடு தோன்றும். அதாவது, முன்பு மண்ணாய் இருந்த பொருள் இப்போது குடமாகிய வேறு நிலையைப் பெற்றுள்ளது. 'குடம் உடைந்தது' எனின் குடம் என்னும் காரிய நிலையை விட்டு, மண்ணாகிய காரண நிலையாய் மாறிவிட்டது என்பது தெரிகிறது.

ஆகவே, எவ்வகையிலும், எவ்வகைச் சொல்லாலும் அடியோடு இல்லாமை என்பது கிடைக்காது.

அப்படியானால் 'முயற் கொம்பு இல்லை' 'ஆகாயத்தாமரை இல்லை' என்ற இடங்களில் முழுதும் இன்மை தெரிகிறதே? இவ்விடங்களில் வேறொரு நிலைமை அடையும் தன்மை கூறமுடியாதே?

பதில்: இச்சொற்களாலும் முழுதும் இன்மை ஒரு போதும் கிடைக்காது. 'எப்படி?' என்றால் 'முயற்கொம்பு இல்லை' என்றால் முயல் இல்லை. கொம்பு இல்லை என்பது சரியாகுமோ? முயலுக்கும், கொம்புக்கும் சம்பந்தம் இல்லாதது தெளிவுபடுமே தவிர, அப்பொருள்களே இல்லை என்பது ஒரு போதும் கூற முடியாது. ஆகவே, சர்வ சூன்ய வாதம் ஒரு போதும் சரியாகாது.

**உளன் எனில் உளன்:–** நான் உளன் என்று சொல்வது போல், சொல்லில்தான் உளன். இறைவனை மறுப்பவன், இறைவன் எனும் உண்மைக்கு இசைய மாட்டான் என்பதால் 'உளன் எனில்' என்கிறார்.

**அவன் உருவம் இவ்வுருவுகள்:–** இறைவன் உளன். ஆனால், அவனால் நியமிக்கப்படுகின்ற இவ்வுலகத்தோடு அவன் கூடியே இருத்தல் வேண்டும். "எவன் ஒருவனுக்கு உயிர்கள் எல்லாம் சரீரம்? எவன் ஒருவனுக்கு இந்த உலகம் சரீரம்?" என்று பிரமாணங்கள் இறைவனைக் கூறுவதால், உயிர்களும், உலகமும் அவனுக்கு உரிமைப்பட்டு அவனுடன் சேர்ந்து உள்ளன.

உளன் அலன் என்பாயோ?

அப்போதும் அவன் "இன்மை" என்னும் தர்மத்தையுடையவனாய்த் தோன்றுவான். அப்போது, "இல்லை" என்ற பொருளாய் வேறொரு தன்மையினை அடைந்ததாய்க் கொண்டு இவற்றின் 'அன்மை' தோன்றும். உதாரணமாக, 'குடம் இருக்கிறது' என்றால் வாயும் வயிருமான உருவம் தோன்றும்; 'குடம் இல்லை' என்றால், இல்லை என்ற தர்மத்தோடு கூடியதாய், வேறொரு வகையால் அது தோன்றும்; அதாவது, இங்கு இல்லை என்றால் வேறு ஒரு இடத்தில் உண்டு: இப்பொது இல்லை என்றால் வேறு ஒரு காலத்தில் உண்டு. குடமாக இல்லை என்றால் மண்ணாக இருக்கும். எங்கும், எப்போதும், ஒரு வகையாலும் குடம் இல்லை என்பது சரியாகாது.

இறைவன் உளன், இலன் ஆகிய இரு குணங்களையும் உடையவனானதாலே, இவை இரண்டும், இரண்டு தர்மங்களாயின.

–இறைவன் 'உளன்' என்ற சொல்லாலும், 'இலன்' என்ற சொல்லாலும், சொன்ன இருதன்மையாலும் உளன் ஆனான்.

–நான் உள்ன் என்ற சொல்லாலே உண்மையைச் சாதித்தேன்; நீ இலன் என்ற சொல்லாலே உண்மையைச் சாதித்தாய்; ஆக, இருவருமே 'இறைவன்' என்பவனை நினைத்துப் பேசினோம்.

இருவருமே உண்மையைச் சாதித்தோம்.

உயிர் என்ற ஒன்று உண்டா, இல்லையா? என்பது போன்று, இறைவன் உள்ளானா? அல்லது, அவன் இல்லவே இல்லையா? ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாத்திகவாதம் இருந்து வந்திருக்கிறது; இனியும் இருக்கும். 'இருக்கிறான்' என்பது ஒரு நம்பிக்கை. 'இல்லை' என்பதும் ஒரு நம்பிக்கை. ஆத்திகன், நாத்திகன், ஆத்திகநாத்திகன் என்று மனிதர்கள் மூவகைப்பட்டவர். அவர்களில் ஆத்திகன் என்பவன் நாத்திகன், ஆத்திக நாத்திகன் ஆகிய இருவரிடமிருந்தும் விலகி தன் வழி செல்ல வேண்டும் என்றால் மணவாள மாமுனிகள். கடவுளைப் பற்றிய அறிவு இல்லாமல் இருப்பினும், நமக்கு மேல் ஓர் சக்தி உள்ளது,, எல்லாம் அவனே பார்த்துக் கொள்வான் என்ற திட நம்பிக்கையுடன் தங்கள் கடமைகளைச் சரிவர செய்யும் மக்களும் ஆத்திகர்கள்தான். ஆனால் தினந்தோறும் திருவாராதனை செய்து, திருமண் காப்பு அணிந்து, கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபாடு செய்து கொண்டு, அதே சமயத்தில் அந்த இறைவன் விதித்த சட்ட திட்டங்களை (சாத்திரங்களை) மீறி, சமுதாயத்திற்குத் தீங்கு விளைவித்துக் கொண்டு திரிகிறவர்கள் ஆத்திகர்களா? ஆத்திக நாத்திகரா? "மெய்யனாகும் விரும்பித் தொழுவார்க்கெல்லாம், பொய்யனாகும் புறமே தொழுவார்க்கெல்லாம்" என்பது ஆழ்வார் வாக்கு.

பரந்ததண்பரவையுள் நீர்தொறும் பரந்துளன்
பரந்தவண்டமிதென் நிலவிசும்பொழிவற
கரந்தசிலிடற்தொறும் இடந்திகழ்பொருடொறும்
கரந்தெங்கும்பரந்துளன் இவையுண்டகரனே

விரிந்து, பரந்து, நிறைந்து – பிரமிப்பின் எல்லை

உலகங்களையெல்லாம் பிரளய காலத்தில் விழுங்கிக் காத்த இறைவன், பரந்திருக்கின்ற சமுத்திரத்திலுள்ள நீர்த்துளிகளில் எல்லாம் இருந்து எங்கும் பரந்து, பரந்திருக்கும் அண்டமோ இது என பிரமிக்கும் வண்ணம் பரந்திருக்கிறான். அவ்வாறே பூமி, ஆகாயம் முழுவதும் பரந்து நிறைந்திருக்கிறான். மிகவும் சூட்சமமான உடலிலும், உடலில் வசிக்கின்ற உயிரிலும் கண்களுக்குப் புலப்படாமல் பரந்திருக்கிறான்.

உடலின் சேர்க்கையால், உயிருக்குக் குறைவு வருவது போல், உடல், உயிரில் சேர்ந்து உறையும் இறைவனுக்கு குறைவருமோ? என்றால் வராது. "குறைவு அறநிறைந்து நிற்பவன் என்று விரிந்து, பரந்து நிற்கும் இறைவனின் தன்மையை விளக்குகிறார்.

ஆகாயத்தை விடப்பெரியவன் என்று கூறப்படும் பரம்பொருள், தண்ணீரில் பரமணுக்களில் நிறைந்து நின்றால், சிறிய இடத்தில் இருப்பதால் நெருக்கப்பட்டு இருப்பானோ அல்ல. ஏனெனில், அந்த ஒவ்வொரு பரமாணுவாக இருக்கும் நீர்த்துளியும், இது பரந்த அண்டமோ என்னும்படி அதற்குள்பரந் திருப்பான். அதாவது மிகப் பெரிய உலகம் (கண்டம்) படைத்து, அதனுள் ஒருவனைத் தனியாக வைத்தது போன்று இருப்பான்.

தண்ணீரில் மட்டுமல்லாமல், பூமி, ஆகாயம் முழுவதும் அதே போன்று பரந்திருக்கின்றான். நிறைவாக நிற்கிறான். இங்கே சொல்லப்படாத காற்று, நெருப்பு என்னும் எஞ்சிய பூதங்களிலும் உள்ளான் என்பது உபலட்சண விதி (முக்கிய மானவற்றைக் கூறிடில் எஞ்சியவை அனுமானம்) ஆக. ஐம்பெரும் பூதங்களாலும் அமைந்த உலகங்கள் முழுவதும் இறைவன் பரந்து நிறைந்துள்ளான்.

அது மட்டுமா?

கரந்த சில இடந்தோறும்;– இமையோடு இமை பொருந்தும் போதைக் காற்றிலே முடியும்படியாக நுட்பமான சரீரந்தோறும்.

அந்தந்த சரீரங்களில் ஞான ஆனந்தங்களோடு கூடியிருக்கிற ஆத்மா தோறும், தான் நிறைந் திருக்கும் அந்த பொருளுக்குத் தெரியாதவாறு மறைந்து உயிர் உடலில் நிறையும்போது, அவ்வுயிர் அவ்வுடலில் ஓரிடத்திலிருந்து ஞானத்தால் எங்கும் நிறையக் கூடியதாய் சொரூபத் தாலேயே நிறைந்திருப்பான்.

அணுவின் தன்மையுடைய உயிருக்குள் எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் எப்படி குறைவு இன்றி நிறைந்திருப்பான்?

"தயிர் உண்ட பொன்வயிறு இவ்வேழ் உலகும் உண்டு இடம் உடைத்தால்" (பெரியதிருமொழி *11.5.3.*) என்கிறபடியே ஆற்றல் உடைய இறைவனுக்குக் குறைவு எப்படி வரும்.

**கரவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை**
**வரனவில்திறல்வலி அளிபொறையாய் நின்ற**
**பரனடிமேல் குருகூர்ச்சடகோபன் சொல்**
**நிரனிறையாயிரத்து இவைபத்தும் வீடே**

<u>பலன் – அழிவில்லாத பேரின்ப மோக்ஷம்</u>

அவன் திடமிக்க பிரமாணங்களால் உறுதி செய்யப்பட்டவன். திடமான ஆகாயமும், நெருப்பும், காற்றும், தண்ணீரும், மண்ணும் என்னும் இவற்றின் தன்மைகளான சிறந்த ஒலியும், தென்றலும், வலியும், தண்ணொளியும், பொறுத்தலும் ஆகிய இவையாகி நின்ற இறைவனுடைய திருவடிகளின் மேல் திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீசடகோபர் அருளிச் செய்த, முறை முறையாக நிறுத்தப்பட்ட ஆயிரம் திருப்பாசுரங்களுள் இப்பத்து பாசுரங்களும் அந்தமில் பேரின்பத்து அழிவில்லாத வீடு எனப்படும் மோட்சத்தை அளிக்கவல்லது.

வேர் இன்றி மரம் உண்டோ? ஆழ்வார் அருளிச் செயல் அன்றி வீடு எனும் மோட்சம் கிடைக் குமோ? உயர்வு அற உயர் நலம் உடையவனைக் காண வேண்டுமானால் ஆழ்வாரின் இறைவனைப் பற்றிய அறிவுரையை நன்றாகப் புரிந்து கொண்டு அவர் காட்டிய வழியில் சென்றால் இறைவனைக் காணலாம்..

ஆழ்வார் காட்டும் வழி தான் என்னவோ?

<u>முதல் பத்து – இரண்டாம் திருவாய் மொழி 2(1)</u>

**வீடுமின்முற்றவும் வீடு செய்து உம்முயிர்**
**வீடுடையானிடை வீடு செய்ம்மினே**

<u>விடுக – பற்றுக</u>

இறைவனைத் தவிர வேறு பொருள்களி டத்தில் உள்ள ஆசை முழுவதையும் விட்டு விடுங்கள்; அவ்வாறு விட்டு விட்டு, உம்முடைய உயிரை அதற்கு உரியவனான இறைவனிடம் சேர்த்து விடுங்கள். ஏனைய பொருள்களை விட்டு, உங்களுக்காக உள்ள இலக்கைப் பற்ற முயற்சியுங்கள். எம்பெருமானிடமிருந்து வந்தவர்கள் நாம். நமக்காக ஏங்குகின்ற தாயும் தந்தையும் அவனே. அவனுக்காகத் துடிக்கும் உயிர்கள் மீண்டும் அவனைச் சேர்த்தல் அவைகளின் குறிக்கோள். மற்றவைகளின் மீது கொண்ட ஆசைகளை முதலில் விட்டால் தான் அவனைப் பற்ற முடியும்.

சிறு குழந்தை பாம்பைப் பிடித்துக் கொண்டிருந்தால் 'போட்டு விடு' என்று முதலில் சொல்லிப் பின் 'பாம்பு கடிக்கும்' என்கிறோம். தீப்பிடித்து எரியும் வீட்டிலுள்ளோரை 'வெளியே வா' என்று முதலில் கூவுகிறோம். அதைப் போன்றே நாம் இறுகப் பற்றியிருக்கும் அற்ப ஆசைகள் நம் இலக்கைச் சேர மிகப் பெரிய தடைக் கற்கள். ஆகவே, அவைகளை 'விட்டு விடுங்கள்' என்று உபதேசம் செய்கிறார் ஆழ்வார். ஆச்சார்யன் ஆணையாகவே அதை ஏற்போம்.

"புத்திரரார்களையும் மனைவியையும் விட்டு விட்டு ஸ்ரீராகவனைச் சரணமாக அடைகிறேன்" (ஸ்ரீராமாயணம், யுத்தகாண்டம், *17:14*) என்றும், ''என்னால் விடப்பட்டது இலங்கை'' (ஸ்ரீராமாயணம், யுத்த காண்டம் *19:5*) என்றும் விபீஷணாழ்வார் ஸ்ரீராமனைப் பற்றுவதற்கு முன் 'விடுகை"யைத் தான் குறிப்பிட்டான்.

ஐம்புலன்களையும் அடக்கி வாழ்பவனுக்கு ஆழ்வார் உபதேசிக்கவில்லை. இந்த உலக வாழ்க்கையின் வெப்பத்தை இன்பம் என எண்ணிச் சுவைத்துக் கொண்டு காலம் தள்ளும் சம்சாரிகளில், யாரேனும் ஒருவருக்காவது இறைவனைப் பற்றிய சுவை பிறக்காதா என்று நினைத்து எல்லோர்க்கும் பொதுவாக உபதேசிக்கிறார். ஆசைகளை விடு என்பதற்கு ஆட்சேபனை இக்காலத்தில் எழும்.

தேகமும், அதில் கை, கால்கள் போன்ற கரணங்களும், மனமும், ஐம்புலன்களும் இறைவனால் எதற்காகப் படைக்கப்பட்டன?

ஆசைகள் இயற்கையாக எழுகின்றன. அவைகளை அடக்கு, நீக்கு என்பது எப்படி நியாயம் ஆகும்?

ஆடு, மாடுகளையும் ஏனைய விலங்குகளும் இயற்கையை ஒட்டி வாழ்ந்து, ஐம்புலன்கள் வழி செல்கின்றனவே என்றெல்லாம் வாதம் செய்யப்படுகிறது. ஆனால், மனிதனுக்கு ஆறாவது அறிவு எம்பெருமான் அருளியிருக் கிறார். வேத சாத்திரங்களைப் படைத்து, செய்ய வேண்டியவை என்ன, விலக்கப்பட வேண்டி யவை என்ன என்பது விதிக்கப் பட்டிருக்கிறது. அறிவின் மூலம் அதைத் தெரிந்து கொண்டு ஐம்புலன்களின் ஆட்சிக்கு மன உறுதியின் மூலம்

கடிவாளம் போட்டுக் கட்டுப்பாட்டுக்குள் கொணர்வதே, மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள வேறுபாடு.

அதைத் தான் இறைவனும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறான்.

பிரம்மச்சர்யம், கிருஹஸ்தாஸ்ரமம், வானப்ரஸ்தம், சந்நியாசம் என்று மனித வாழ்க்கையை நான்கு நிலைகளாகப் பிரித்து ஒவ்வொரு நிலையிலும் எப்படி வாழ வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது. அது ஒரு ஒழுங்கு முறை; நியதி. இறைவனை முறைப்படி சேர ஓர் வழிகாட்டி.

ஆனால், நடப்பது என்ன?

ஐம்பதைத் தாண்டியவர்கள் வழிகாட்டிகளாக இருக்க வேண்டியவர்கள், சிலர் கடமைகள் மறந்து பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதால் தான் இளைஞர்கள் திசை திரும்புகின்றனர்.

கூரத்தாழ்வான் எல்லாவற்றையும் விட்டு விட்டு இராமாநுஜரிடம் சேர்ந்தார். ஆனால், நம்மில் பெரும்பான்மையினர், மிகச் சிறிய அளவு விட்டு விட்டு பெரும் அளவு உலக வாழ்க்கையைச் சுவைக்க வைத்துக் கொண்டு, இறைவன் அருள் புரியவில்லையே என்று அவனையே குறை கூறுகின்றோம். அத்துடன் நில்லாமல், ''நாங்கள் எவ்வளவோ தானம் செய்தோம். பல ஆசைகளை (வயதான காலத்தில் உடல் வலுவு இல்லாமல்) விட்டு விட்டோம்,'' என்ற தற்பெருமைகளுக்குக் குறைவில்லை.

விட்டு விடல் என்பதே பெரிய சாதனை. பின்னர் தான் பற்றுதல். ஆகவே, "வீடு செய்து" (விட்டு விட்டு) என்று கூறுகிறார். சிறையில் இருக்கும் ராஜகுமாரன் விடுபடுவதுதான் முக்கியம். பின்னர் தான் முடி சூடி ராஜ்யம் ஆள்வது எல்லாம். உயிர்களும், உலகமும், இறைவனின் சரீரம்; அவன் சொத்து, ஆகவே 'உம் உயிரையும், அந்த உயிருக்குள் வீடாக உள்ள சரீரத்தையும், அவைகளுக்கு உரியவனிடத்தில் சேர்த்து விடுங்கள்' என்கிறார் (அல்லது) 'உம் உயிரைத் தன் சரீரமாக உடைய இறைவனிடத்தில் சேருங்கள்' (அல்லது) 'உம் உயிரை சமர்பித்தல் உடையவனித்திலே.' (அல்லது) 'உம் உயிரை வீட்டினை (மோட்சத்தை) உடையவனிடத்தில் சேருங்கள் என்றெல்லாம் பொருள் கூறுவர்.

தானாகவே அழிந்து போகின்ற தேகத்தைச் சொல்லாமல், உயிரை மட்டுமே கூறுகிறார். 'உடையவனிடத்தில்' என்கிறாரே. யார் அந்த உடையவன்? என்று ஆவலாக நாம் கேட்க, விடை பத்தாவது பாசுரத்தில் ''வண்புகழ் நாரணன்' என்று அருளிச் செய்கிறார்.

<u>வீடு செய்மின்:</u> அவன் உங்கள் உயிருக்குச் சொந்தக்காரன். அந்த உயிரை அவன் தன்னிடம் மீண்டும் வந்து சேர ஏக்கத்துடன் நோக்கிக் கொண்டிருக்கிறான். எந்த விவாதமும் இன்றி, வீணான எதிர்ப்பின்றி, மரியாதையாக உங்கள் உயிரை அவனிடம் சமர்ப்பிக்க இசைந்து விடுங்கள்.

இதனால் என்ன பலன்? (என்ன இலாபம்?) சம்சார வாழ்க்கையில், "நான், என்னுடையது" என்ற செருக்குடன் செய்த பல தீவினைகள் (அறிந்தும், அறியாமலும் புரிந்த) தீய செயல்கள், இன்னும் பல சன்மங்கள் பிறந்து இந்தக் கடனைத் தீர்க்க முடியாமல் திணறும் சம்சாரிக்கு ஒரே வழி பிராயச்சித்தம் – இறைவனுக்குச் சொந்தமான உயிரை அவனிடத்தில் எந்தத் தயக்கமும் இல்லாமல் சுமூகமாகச் சேர்த்து விடுவதே.

'உயிர்', இறைவன் அளித்த பொருள்களில் மிகச் சிறந்தது. அது எப்படியும் உடலை விட்டு நீங்கப் போகிறது. அந்த உயிரை மிகவும் மகிழ்ச்சியுடன், இசைந்து, அவனிடம் சமர்ப்பியுங்களேன்; உயிருக்கு வேறு கதி இல்லை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

அமைதியாக, எந்தச் சஞ்சலமுமின்றி, அதை அவனிடம் அளித்து விடுங்கள்.

ஆழ்வார் ஏதோ உடனே நம் உயிரை விட்டு விடச் சொல்கிறார் என்று அஞ்சுதல் வேண்டாம். பகவானிடம் பக்தியை இடைவெளி இல்லாமல் தொடர்ந்து செலுத்துங்கள்.

''மரணமானால்'' (மட்டுமே) வைகுந்தம் கொடுக்கும் பிரான்' என்று ஆழ்வாரே அருளியுள்ளார் (–திருவாய்9 –10). ஆகவே தயங்க வேண்டாம். உடலை விட்டு உயிர் தானாக பிரியும்போது, அவன் சொத்தை அவனிடம் ஆனந்தமாகவும், திருப்தியுடன் சமர்ப்பிக்கிறோம் என்று நினைப்போம்.

'குறித்த ஒரு சிலரை மட்டும் நியமிக்கின்ற யமனையும் நியமிக்கின்றவன் இறைவன். ஆனால், யமன் 'சுடு, சுட்டுப் பொசுக்கு' என்று கூறுதலைப் போன்று அன்றி, எல்லோர்க்கும் இனிமையே செய்கின்றவனும், 'அந்தர்யாமிப் பிரஹ்மணத்தில்' கூறப்படும் ஏற்றத்தை உடையவனாயும் இருக்கும் விஷ்ணு உன் மனத்திலே இருக்கின்றான். அவனோடு (உயிர் என்னுடையது, உன்னுடையதல்ல என்ற) விவாதம் இன்றி இருந்தால் போதும். அதுவே உனக்குப் பேற்றினை (பலனை) அளிக்கவல்லது. பலன் எதிர்பார்த்து புண்ணியத் தலங்கள் தேடிப் போக வேண்டாம்," **(மனு –ஸ்மருதி, 8, 92).**

**(தொடரும்)**

**முனைவர் டி.எஸ். ராமஸ்வாமி**



மகா விஷ்ணுவுக்கு மிகவும் பிடித்தமான தலங்களாக விளங்குபவை ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சிபுரம், ஸ்ரீமுஷ்ணம், வானமாமலை, மேல்கோட்டை, கும்பகோணம், திருவனந்தபுரம், அயோத்தி, பத்ரிநாத், நைமிசாரண்யம், ஸார க்ஷேத்திரம் என பன்னிரண்டு தலங்களாகும். இவற்றில் ஸார க்ஷேத்திரம் எனப்படும் திருச்சேறையும் ஒன்றாகும்.

சோழ வள நாட்டில் திவ்விய தேசங்களில், வடகரைத் தலங்களுள் ஒன்றாகத் திகழ்வது திருச்சேறை ஆகும். இது தலம், தீர்த்தம், மூர்த்தி என சிறப்பு வாய்ந்ததாகத் திகழ்கின்றது.

### காவிரி பெருமை அடைதல்

ஒரு காலத்தில் விந்திய மலைச் சாரலில் அனைத்து நதிகளும் பெண்ணுருவம் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது விச்சுவாவசு என்ற கந்தர்வன், இவர்களிடம் வந்து பணிவுடன் வணங்கி விட்டுச் சென்றான். அதன் பின் யாருக்கு அவன் மரியாதை செய்தான் என்பதில் நதிகளுக்குள் விவாதம் ஏற்பட்டது. இதுபற்றி அவனிடமே இவர்கள் கேட்க அதற்கு அவன், நதிகளில் சிறந்தது எதுவோ அதைத் தான் நான் வணங்கினேன் என்று கூறினான்.

அந்த பதிலில் திருப்தி அடையாத அவர்கள் பிரம்மரிஷியிடம் சென்றனர். அவர் இறைவனின் திருவடியைக் கழுவும் கங்கை தான் சிறந்தது என்று கூறினார். இந்த பதிலில் காவிரியைத் தவிர அனைவரும் திருப்தி அடைந்தனர். ஆனால், அந்த பதிலில் திருப்தி அடையாத காவேரி, பிரம்மனை நோக்கித் தவமிருக்கத் தொடங்கினாள். அதன் பின் காட்சி தந்த பிரம்மா, கங்கைக்கு மேலான சிறப்பை மகா விஷ்ணுவால் மட்டுமே தர இயலும் என்று கூறினார். மகா விஷ்ணுவை அணுக சாரபுஷ்கரணியில் தவமியற்றுமாறும் அறிவுரை கூறினார்.

அதன்படி கடும் தவம் இயற்றிய காவிரிக்கு மனமிரங்கிய மகா விஷ்ணு,



# திருச்சேறை சாரநாதப் பெருமாள்



குழந்தை உருவில் அவள் முன் தோன்றினார். வடநாட்டில் கங்கையின் புகழைப் போல தென்னாட்டில் காவிரியின் புகழ் சிறந்து விளங்கும் என்றும், இந்த சார தீர்த்தத்தில் நீராடித் துதிப்பவர்கள் முக்தியடைந்தவர்கள் என்றும், வரமளித்தார்.

இச்சம்பவம் தைப் பூசத்தன்று நிகழ்ந்ததால், இதனைப் பெருமைப்படுத்தும் வகையில் இத்தலத்தில் தைப்பூசத்தன்று தேரோட்டம் நடைபெறுகின்றது. வைணவத் தலங்களில் இத்தலத்தில் மட்டுமே இச்சிறப்பு உள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தேரில் சாரநாதப் பெருமாள் ஐம்பெருந்தேவியருடன் காட்சி தருவது குறிப்பிடத்தக்கது.

**தீர்த்த மகிமை**

திரேதாயுகத்தின் முடிவில் மகா விஷ்ணு பிரம்மாவை அழைத்தார். திருச்சேறை என்னும் தலத்தில் பிருகு, மார்க்கண்டேயம், சௌனகம், ருத்ரம், பிரம்மம், உரோமசம், சாரம் என ஏழு தீர்த்தங்கள் அமைந்துள்ளன. இவற்றில் சார தீர்த்தம் பாவங்களை அழிக்கக்கூடியதாக விளங்குகின்றது. இதிலிருந்து மண் எடுத்து கும்பம் செய்து, வேத சாஸ்திரங்களை அதனுள் அடக்கி அவற்றை அடுத்த யுகத்திற்கு எடுத்துச் செல்லக் கட்டளையிட்டார். அவ்வாறு பிரம்மனால் நிறுவப்பட்ட கும்பம் உள்ள தலம் கும்பகோணம் ஆனது. பிரம்மன் மண் கொண்டு வந்த இடம் சார தலமானது. சாரம் என்பதற்குச் சத்து என்பது பொருளாகும். திருச்சாரம் என்று பெயரே மருவி திருச்சேறையாக நிலைத்து விட்டது.

இத்தீர்த்தத்தில் மாசி மாதத்தில் நீராடி, தேவதைகளை வணங்கி, முன்னோர்க்குப் படையல் செய்தால் நூறு ஆண்டு முன்னோர்களும் சாந்தி அடைவார்கள். பங்குனி மாத ரோகிணியில் நீராடி பெருமாளை வணங்கினால் பிரம்மஹத்தி தோஷம் அகலும், சூரியன் துலா ராசியில் இருக்கின்ற ஐப்பசி மாதத்தில் நீராடினால் அனைத்துப் பாவங்களும் நீங்கும். தை மாத ரேவதி நட்சத்திரத்தில் நீராடி வழிபடுவோருக்கு உயர் கல்வி, புகழ், செல்வம் மகப்பேறு போன்ற நற்பலன்கள் கிடைக்கும். இவற்றை இத்தல புராணம் எடுத்துரைக்கிறது.

இதேபோல, இத்தலத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தைப்பூச நட்சத்திரத்தில் வியாழன் வரும்போது, சாரத் தீர்த்தத்தில் நீராடுவது மகாமக குள நீராடலுக்கு இணையானதாகப் போற்றப்படுகின்றன.

**மணவாளநாயக்கர்**

பழங்காலத்தில், மன்னார்குடி இராஜகோபாலசுவாமி திருக்கோயில் திருப்பணிக்காக அழகிய மணவாள நாயக்க மன்னனின் ஆணைப்படி, கல் ஏற்றிய வண்டிகள் இவ்வூர் வழியாகச் சென்றன. அப்போது நரசபூபாலன் என்பவன் அவ்வண்டிகள் திருச்சேறைக்கு வந்ததும், வண்டிக்கு ஒரு கல் வீதம் பெருமாள் ஆலயத் திருப்பணிக்காக இறக்கி வைத்துக் கொண்டான். இதைக் கேள்விப்பட்ட மன்னன் திருச்சேறை வந்தான். இதையறிந்து நடுங்கிய நரசபூபாலன் பெருமாளிடம் வேண்டி நின்றான். அப்போது அடியாருக்கு மனமிரங்கி சாரநாதப் பெருமாள், அம்மன்னன் முன்பாக மன்னார்குடி இராஜகோபாலனாக காட்சி தந்தார். இதனால் மகிழ்ச்சி அடைந்த மன்னன், திருச்சேறை ஆலயத்திற்கும், திருப்பணிகள் செய்து மகிழ்ந்தான்.

இதனைக் குறிக்கும் வகையில் இராஜகோபாலர் சந்நிதி இத்தலத்தில் அமைந்துள்ளது.

**ஆலய அமைப்பு**

இவ்வாலயம் கிழக்கு நோக்கிய 90 அடி உயர பிரம்மாண்ட இராஜகோபுரத்துடன் அமைந்துள்ளது. கோயில் 380 அடி நீளத்திலும் 234 அடி அகலத்திலும் அமைந்துள்ளது. இராஜகோபுரத்தின் எதிரே ஆலயத்தின்

பரப்பளவிற்கு இணையாக அழகிய சார புஷ்கரணி எனும் திருக்குளம் அமைந் துள்ளது. இத்திருக்குளக் கரையில், காவிரிக்கும், ஆஞ்சநேயருக்கும் தனிச்சந்நிதிகள் அமைந்துள்ளன.

ஆலய வளாகத்திற்குள், சாரநாதப் பெருமாள் மற்றும் சாரநாயகித் தாயாருக்குத் தனித்தனி சன்னிதிகள் அமைந்துள்ளன. மூலவர் சாரநாதப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகின்றார். உற்சவராக ஸ்ரீதேவி, பூதேவி, நீலாதேவி, மார்பில் லட்சுமியுடன், மாமதலைப்பிரான் ஆகியோருடன் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகின்றனர்.

இத்துடன் இராஜகோபாலன், இராமர், மணவாளமாமுனிகள் சன்னிதியும் அமைந்துள்ளன. ஆழ்வார் ஆச்சாரியார்களுக்குத் தனியாக கருவறை அமைந்திருப்பது இத்தலத்தின் சிறப்பாகும்.

ஆதிசேஷன் பீடத்தில் சந்தான கிருஷ்ணன் அழகிய குழந்தையாகக் காட்சி தருகின்றார். இவரைக் கற்கண்டு வெண்ணையுடன் வணங்கிச் சிறிது நேரம் இளம் தம்பதியினர் கைகளில் வைத்து வேண்டிக் கொண்டால் மகப்பேறு கிடைக்கும் என்பது கண்கூடான நம்பிக்கையாக உள்ளது.

இதேபோல, ஸ்ரீதேவி பூதேவியருடன் நரசிம்மர் அர்த்த மண்டபத்தில் காட்சி தருகின்றார். மாதந்தோறும் சுவாதி நட்சத்திரத்தில் இவருக்குத் திருமஞ்சனமும், பானகத்துடன் தளிகையும் படைக்கப்படுகின்றன. இவரை வணங்குவதன் மூலம் காரியம் கைகூடும் என்பதும் இதேபோல, ஸ்ரீலட்சுமி நரசிம்ம ஸ்துதியை சொல்லி வழிபட்டால் ரிண விமோசனம் (கடன் நிவர்த்தி) கிடைக்கும் என்பதும் நம்பிக்கையாக உள்ளது.

**தலச்சிறப்புகள்**

இத்தலம் பஞ்ச சாரத் தலமாக விளங்குகின்றது. இறைவன் – சாரநாதப் பெருமாள், தாயார் – சாரநாயகித் தாயார், விமானம் – சார விமானம், தீர்த்தம் – சாரத் தீர்த்தம், தலம் – சாரத் தலம்.

இத்தலத்தைப் பற்றி பதினெட்டுப் புராணங்களில் உள்ள பிரமாண்ட புராணத்திலும், பவிஷ்ய புராணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தலம் பாவங்கள் நீங்கி முக்தி தரும் தலமாக விளங்குவதால், அனைத்து வைணவத் தலங்களிலும் இது சிறந்ததாகப் போற்றப்படுகின்றது.

இத்தலம் ஸ்ரீதேவி, பூதேவி, மகாலட்சுமி, சார நாயகி, நீலாதேவி என ஐம்பெருந்தேவியருடன் அருள் வழங்கும்



தலமாகத் திகழ்கின்றது.

மூலவர் கருவறையில் காவிரி வழிபடும் கோலம் இத்தலத்தின் சிறப்பம்சமாகும்.

மார்க்கண்டேயர் இத்தலத்தில் முக்தி அடைந்ததால், கருவறையில், பெருமாளின் வலது பக்கம் மார்க்கண்டேயர் காட்சி தருகின்றார்.

**கல்வெட்டுகள்**

கி.பி.1909 மற்றும் கி.பி.1932ஆம் ஆண்டு இந்தியத் தொல்லியல் ஆய்வறிக்கைகளின் மூலம் சாரநாதப் பெருமாள் ஆலயத்தில் மூன்று கல்வெட்டுகள் கண்டறியப் பட்டுள்ளன. இதில் பழைமை வாய்ந்தது முதலாம் பராந்தகச் சோழனின் இரண்டு கல்வெட்டுகளும், முதலாம் இராஜேந்திர சோழனின் ஒரு கல்வெட்டும் ஆகும். இதில் இவ்வூர் சேற்றூர் என்றும், இக்கோயில் திருமுத்தி திருக்கோயில் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**திருமங்கை ஆழ்வார்**

இத்தலம் திருமங்கை ஆழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட தலமாக விளங்குகின்றது.




**"உண்ணாது வெங்கூற்றம் ஓவாத**
**பாவங்கள் சேரா...**
**... பண்ணார வண்டு இயம்பும்**
**பைம்பொழில் சூழ் தண்சேறை**
**யம்மான் தன்னை**
**கண்ணாரக் கண்டுருகிக் கையாரத்**
**தொழுவாரைக் கருதுங்காலே."**

–திருச்சேறை பெருமானைக் கண்குளிரக் கண்டு வணங்கித் தொழுபவர்களை நினைக்கும் அளவில் காலன் நம்மை வருத்த மாட்டான். தீவினைகள் நம்மை அணுகாது என்று திருமங்கையாழ்வார் இத்தலத்து இறைவனைப் புகழ்ந்துரைக்கின்றார்.

**விழாக்கள்**

தைப்பூசத்திற்கு முன்பாக எட்டு நாட்களுக்குக் கொடியேற்றத்துடன் பிரம்மோற்சவம் தொடங்குகிறது. காலையிலும் மாலையிலும் சுவாமி புறப்பாடும், தைப்பூசத்தன்று தேரோட்டமும் பத்தாம் நாளன்று துவாதசி வழிபாட்டுடனும் பிரம்மோற்சவம் நிறைவு பெறுகிறது.

அட்சய திருதியை அன்று காலையில் கருட சேவை, சிறப்பு அபிஷேகம், ஆடியில் ஜேஷ்டாபிஷேகம், மறுநாள் 108 கலச திருமஞ்சனம், புரட்டாசி நவராத்திரியில் உற்சவம், கார்த்திகையில் 7 நாட்கள் பவித்ரோற்சவம், மார்கழியில் 20 நாட்கள் இராப்பத்து பகல்பத்து உற்சவம், வைகுண்ட ஏகாதசி, சித்திரையில் 5 நாட்கள் எம்பெருமானார் உற்சவமும், ஐப்பசியில் 10 நாட்கள் மணவாள மாமுனிகள் உற்சவமும் நடைபெறுகின்றன.

இதுதவிர, மாதப் பிறப்பு, அமாவாசை, பூசம், ஏகாதசி, வெள்ளிக் கிழமைகளில் மாலை தாயாரின் பிரகாரப் புறப்பாடும், ஊஞ்சல் உற்சவங்களும் நடைபெறும். ஒவ்வொரு சுவாதி நட்சத்திரத்தன்றும் மாலை நரசிம்மருக்கும், திருவோண நட்சத்திரத்தன்று காலையில் சீனிவாசப் பெருமாளுக்கும் திருமஞ்சனம் நடைபெறும். திருவாதிரை நட்சத்திரத்தன்று எம்பெருமானாருக்கும், மூல நட்சத்திரத்தன்று மணவாள மாமுனிகளுக்கும், காலையில் பிரபந்த சேவை, சாற்றுமுறை நடைபெறும்.

**அமைவிடம்**

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டத்தில் முடிகொண்டான் ஆற்றுக்கும், குடமுருட்டி ஆற்றுக்கும் இடையே திருச்சேறை அமைந்துள்ளது. கும்பகோணம் – திருவாரூர் செல்லும் சாலையில் தெற்கே 15 கி.மீ., தொலைவில் திருச்சேறை திருத்தலம் அமைந்துள்ளது. கும்பகோணத்தில் இருந்து அதிக அளவில் பேருந்து வசதிகள் உண்டு.


திருச்சேறையில் தேவாரப் பாடல் பெற்ற ஞானவல்லியம்மை உடனமர் செந்நெறியப்பர் திருக்கோயிலும் அமைந்துள்ளது. இது திருஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற தலமாக விளங்குகின்றது. பிறவிக் கடன் தீர்க்கும் ரிண விமோசனர் இத்தலத்தில் அமைந்துள்ளார்.


திருச்சேறையில் இருந்து சுமார் 10 கி.மீ., தொலைவில் கல்கருடன் எழுந்தருளியுள்ள நாச்சியார் கோயில் அமைந்துள்ளது.

**படங்கள் – கட்டுரைகள்:**
**பனையபுரம் அதியமான்.**

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் } ப.ரா. சம்பத் இ.ஆ.ப., ஆணையர்
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை,
சென்னை – 600 034. தொலைபேசி எண்: 28334811/12/13
ஆசிரியர்(கூ.பொ) ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர் சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை–86
தொலைபேசி: 23450920/28117575


Nalli®
Nalli
80
YEARS
SINCE 1928
First and the Finest
பைரவி
கலெக்ஷன்
Code No.BH09004
பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. தொ. பே. : 24344115 / 42604567. Fax : (044) 24343062
Email : inquiry@nalli.com Website : www.nalli.com
• சென்னை • பெங்களூரு • கோயம்புத்தூர் • தில்லி • ஐதராபாத் • மதுரை • மும்பை • திருச்சி • திருநெல்வேலி • சிங்கப்பூர் • USA





பதிவுஎண்: TN/CH(C)/305/09-11/WPP NO. 451/09-11

# அருள்மிகு கற்பகாம்பாள் உடனாய கபாலீசுவரர் திருக்கோயில்

திருமயிலை, சென்னை - 600 004

## பங்குனிப் பெருவிழா அழைப்பிதழ் - 2010

### நிகழ்ச்சி நிரல்

| திருவிழா | 2010 மார்ச் | திருவள்ளுவர் ஆண்டு 2041 | கிழமை | காலை மணி | பகல் விழா | இரவு மணி | இரவு விழா |
|---|---|---|---|---|---|---|---|
| | 19 | பங்குனி 5 | வெள்ளி | 10.00 | கிராமதேவதை பூசை<br>அருள்மிகு கோலவிழி அம்மன்<br>சிறப்பு வழிபாடு | 9.00 | விநாயகர் உற்சவம்<br>வெள்ளி மூஷிக வாகனம் |
| 1 | 20 | 6 | சனி | 5.30<br>6.00-<br>7.30<br>8.00 | கொடியேற்று மண்டபத்தில்<br>இறைவன் எழுந்தருளல்<br>**கொடியேற்றம்**<br>பவழக்கால் விமானம் | 10.00 | அம்மை மயில் வடிவில்<br>சிவபூசைக்காட்சி புன்னை மரம்,<br>கற்பக மரம், வேங்கை மரம்<br>வாகனங்கள் |
| 2 | 21 | 7 | ஞாயிறு | 9.30 | **சூரிய வட்டம்** | 9.00 | சந்திர வட்டம், கிளி,<br>அன்ன வாகனங்கள் |
| 3 | 22 | 8 | திங்கள் | 6.00 | **அதிகார நந்தி காட்சி**<br>- கந்தருவன், கந்தருவி,<br>மூஷிகம்வெள்விடை வாகனங்கள்<br>திருஞானசம்பந்தர் திருமுலைப்பால்விழா | 9.00 | பூதன், பூதகி<br>தாரகாசுர வாகனங்கள் |
| 4 | 23 | 9 | செவ்வாய் | 8.30 | புருஷாமிருகம், சிங்கம்<br>புலிவாகனங்கள் | 9.00 | நாகம், காமதேனு,<br>ஆடு வாகனங்கள் |
| 5 | 24 | 10 | புதன் | 9.30 | சவுடல் விமானம் | 11.30 | **வெள்விடை<br>பெருவிழாக்காட்சி** |
| 6 | 25 | 11 | வியாழன் | | பல்லக்கு விழா | 10.30 | ஐந்திருமேனிகள்<br>யானை வாகனங்கள் |
| 7 | 26 | 12 | வெள்ளி | 7.30-<br>8.00<br>8.30 | இறைவன் திருத்தேருக்கு<br>எழுந்தருளல்<br>**திருத்தேர் வடம் பிடித்தல்** | | தேரிலிருந்து இறைவன்<br>திருக்கோயிலுக்கு எழுந்தருளல்<br>ஐந்திருமேனிகள் விழா |
| 8 | 27 | 13 | சனி | 12.00<br>3.30 | திருஞானசம்பந்தசுவாமிகள்<br>எழுந்தருளல் என்பை பூம்பாவையாக்கி<br>அருளல் வெள்ளி விமானத்தில்<br>**இறைவன் அறுபத்து மூன்று<br>நாயன்மார்களோடு** திருக்காட்சி | | சந்திரசேகரர்<br>பார்வேட்டை விழா,<br>ஐந்திருமேனிகள் விழா |
| 9 | 28 | 14 | ஞாயிறு | | ஐந்திருமேனிகள் விழா, | 6.30 | **இறைவன்இரவலர் கோலவிழா,<br>ஐந்திருமேனிகள் விழா** |
| 10 | 29 | 15 | திங்கள் | | திருக்கூத்தப் பெருமான் திருக்காட்சி<br>ஐந்திருமேனிகள் விழா,<br>தீர்த்தவாரி | 6.30<br>7.30-<br>9.00 | புன்னை மரத்தடியில்<br>உமாதேவியார்<br>மயிலுருவுடன் மாதேவரை வழிபடல்<br>**திருக்கல்யாணம்**<br>கயிலா ஊர்தி, கொடியிறக்கம்<br>சண்டேசுவரர் விழா நிறைவு |
| | 30 | 16 | செவ்வாய் | | உமாமகேஸ்வரர் தரிசனம் | | பந்தம் பறி விழா |
| | 31 | 17 | புதன் | | விழா நிறைவுத் திருமுழுக்கு | | விடையாற்றி தொடக்கம் |

குறிப்பு : பெருவிழாவில் பத்து நாட்களிலும் பகல், இரவு காலங்களில் ஐந்திருமேனிகள் திருவீதி உலா நடைபெறும்.

**ம.தேவேந்திரன், பி.எஸ்சி. பி.எல்.,**
துணை ஆணையர்/ செயல் அலுவலர்

**டாக்டர் நல்லி என்.குப்புசாமி செட்டியார்**
அறங்காவலர் குழுத்தலைவர்

விஜயா தாயன்பன், பி.ஆர்.தமிழரசன், பொழிச்சலூர் பி.வைத்தியநாத முதலியார், அ.கிருஷ்ணமூர்த்தி.
அறங்காவலர்கள்